தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 138 சுபகிருது வருடம், மார்கழி மாதம் 18ஆம் திகதி திங்கட்கிழமை
(02.01.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஆகிர் - 09, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60

கமெண்ட் கந்தர்...

கஞ்சிப்பானை இம்ரான் தப்பிச்சுப் போயிட்டாரென்று பொலிஸே சொல்லு தெண்டா பாருங்கோவன் நிலைமையை..!

உஷ்

இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதா கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் இலங்கை வந்து முக்கிய சந்திப்புகளை நடத்திவிட்டுச் சென்றுள்ளார்.

ஜனாதிபதி ரணில் கடந்த சில நாட்களாக நுவரெலியாவில் தங்கியிருந்த அதேசமயம் மேற்படி பிரமுகர் நுவரெலியாவுக்கும் சென்று ஜனாதிபதியுடன் பேச்சு நடத்திவிட்டுச் சென்றதாகத் தகவல்.

இரு நாட்டுப் பாதுகாப்பு நிலைமைகள் குறித்தே பேசப்பட்டதாக உள்ளகத் தகவல்கள் சொல்கின்றன.

மின் கட்டணம் எகிறுகிறது!

அமைச்சரவையில் இன்று இறுதித் தீர்மானம்

(நமது நிருபர்)

தொழில்துறைக்கான பொதுவான கொள்கை வழிகாட்டு தல்களை வகுக்க மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச் சருக்கு சட்டம் முழு அதிகாரமளித்துள்ளது என்று சட்டமா அதிபர் விளக்கமளித்துள்ளதை அடுத்து, எதிர்ப்புகளை பொருட்படுத்தாமல் 65 சதவீத கட்டண உயர்வை அரசாங்கம் நிறைவேற்றவுள்ளது. இதற்கென அமைச்சரவை அனு மதியைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவைப் பத்திரம் இன்று (02) சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அறியமுடிந்தது.

"இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு சட்டமானது, பொதுப் பயன்பாட்டுத்துறைக்கு பொறுப்பான அமைச்சருடன் கலந்தாலோசித்து தனக்குத் தேவையான இடத்தில், பொதுவான கொள்கை வழிகாட்டுதல்களை வகுத்து அத்தகைய வழிகாட்டுதல்களை அமைச்சர் மூலம் வெளியிடுவதற்கு அமைச்சரவைக்கு அதிகாரம் வழங்கு வதாகவும் சட்டமா அதிபர் சஞ்ஜய் ராஜரத்தினம் கூறியுள் ளார். அத்தகைய வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்த பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு கடமைப்பட்டுள்ளது" என்று சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காளுன விஜேசேகரவினால் இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

உத்தேச கட்டண உயர்வின் கீழ் யுனிட் மற்றும் நிலையான கட்டணங்கள் இரண்டும் கணிசமாக உயரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், 0-30 அலகுகளுக்கு இடையில் ரூ. 8 முதல் ரூ. 30 வரையிலும் 31-60 அலகுகளுக்கு இடையில் ரூ. 10 முதல் ரூ. 37 வரையிலும் 61-91 அலகுகளுக்கு இடை யில் ரூ. 16 முதல் ரூ. 42 வரையிலும் அதிகரிக்கும். 91 அலகு களுக்கு மேலுள்ள வகைகளில் நுகர்வோருக்கு அதிகரிப்பு இருக்காது. அத்துடன் நிலையான கட்டணங்களும் கணிசமாக அதிகரிக்கின்றன.

இதேவேளை, 0-30 அலகு... 02 பக்கம்

2023ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தை முன்னிட்டு வரலாற்றுப் புகழ்பெற்ற நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்று (01) இடம்பெற்றன. (படப்பிடிப்பு: யாழ்.செய்தியாளர்)

படையினரின் கடும் பாதுகாப்பை மீறி தமிழகம் சென்ற கஞ்சிப்பானை இம்ரான்

தீவிர விசாரணையில் இந்திய புலனாய்வுத்துறை

இலங்கையின் பிரபல பாதாள உலகக்குழு தலைவன் மொஹமட் நஜீம் மொஹமட் இம்ரான் என்ற 'கஞ்சிப்பானை இம்ரான்' நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்ட சில நாட்களுக்குப் பின்னர் இந்தியாவின் இராமேஸ்வரத்துக்குச் சென்று பதுங்கியுள்ளதாக இந்திய பொலிஸ் வட்டாரங்கள் சனிக்கிழமை தெரிவித்ததாக 'தி ஹிந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் 'தி ஹிந்து' வெளியிட்ட செய்தியில்,

இராமநாதபுரம் மாவட்ட கடற்கரை யோரம் இறங்கிய அவரையும் அவரது நண்பரையும் தேடுமாறு தமிழக உளவுத்துறை மாநிலம் முழுவதும் உள்ள உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு கடந்த டிசம்பர் 25 அன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொலைகள், குற்றச் செயல்கள்.. 02 பக்கம்

மது வருமானம் ரூ. 1,700 கோடி

நாட்டில் கடந்த 2022 ஆம் ஆண்டு மதுவரித் திணைக்களத்துக்கு வருமானமாக ஆயிரத்து 700 கோடி ரூபா கிடைக்கப்பெற்றுள்ளது. அந்தத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு 110 வருடங்கள் கடந்துள்ள நிலையில், 2022 இலேயே அதிக வருமானம் பதிவாகியுள்ளது.

மதுபான உற்பத்தியாளர்களுக்கு விதிக்கப் பட்ட தண்டப்பணம் ஊடாகவே அதிக வருமானம் கிடைக்கப்பெற்றதாக மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி தெரிவித்துள்ளார்.

மேலும், சட்டவிரோத மதுபான இறக்கு மதிக்கு விதிக்கப்பட்ட தண்டப்பணம் ஊடாக 2021ஆம் ஆண்டு 140 பில்லியன் ரூபா வருமானமும்... 02 பக்கம்

அமைச்சரவைக்கு அதிகாரம் கிடையாது

மின் கட்டண அதிகரிப்பு குறித்து ஆணைக்குழு மீண்டும் எதிர்ப்புக் குரல்

(நா. தினுஷா)

மின் கட்டணம் தொடர்பாக இறுதித் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கே இருக்கிறது. அமைச்சரவைக்கு அந்த அதிகாரம் இல்லை. மின் கட்டணத்தை அதிகரிப்பது என்ற தீர்மானத்தை அமைச்சரவையில் எடுத்துவிட்டு, அனுமதி வழங்குமாறு தமக்கு கட்டளை பிறப்பிக்கப்படுமாக இருந்தால் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மின்கட்டண அதிகரிப்பு என்ற இறுதித் தீர்மானத்துக்கு அரசாங்கம் வருமாக இருந்தால் அதற்கு எதிராக நீதிமன்றத்துக்கு... 02 பக்கம்

வாகன இலக்கத்தகடுகளில் மாகாண குறியீடுகள் நீக்கம்

குற்றமிழைக்கும் சாரதிகளின் அனுமதிப்பத்திரம் இரத்து

(நா. தினுஷா)

வாகன இலக்கத்தகடுகளிலுள்ள மாகாண குறியீடுகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வீதி விதிமுறை களை மீறி அதிக குற்றம் இழைக்கும்... 02 பக்கம்

ஜனாதிபதியுடன் பேச்சுகளை புறக்கணிக்குக!

மட்டக்களப்பில் கோரிக்கை

02 பக்கம்

2023ஆம் ஆண்டு புத்தாண்டுப் பிறப்பின் போது தாமரைத்தடாகம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டதுடன், வாணவேடிக்கைகள் கண்களைக் கவரும் விதத்தில் அமைந்திருந்தன. (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

அரசைத் தூற்றும் பொதுமக்கள்

அமைச்சர் பந்துல கவலை

(நமது நிருபர்)

நாட்டில் நிதித்துறை, இறக்குமதி தொடர்பான முக்கியமான தீர்மானங்களை மத்திய வங்கி எடுக்கின்ற போதிலும் விலை அதிகரிப்பு குறித்து மக்கள் அரசாங்கத்தையே தூற்றுவதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன 'தமிழன்' நாளிதழுக்கு தெரி வித்தார்.

அச்சு ஊடகங்கள் எதிர்நோக்கியிருக்கும் பத்திரிகைத் தாள்களுக்கான பற்றாக்குறை மற்றும் விலை அதிகரிப்பு தொடர் பில் வினவியபோதே அவர்... 02 பக்கம்

கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனியான கூட்டணி அவசியம்

ஹசன் அலி வலியுறுத்து

கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் எதிர்வரும் உள்ளூ ராட்சித் தேர்தல்களில் கட் சிகள் ரீதியாகவும் குழுக்கள் ரீதியாகவும் பிரிந்து விடா மல் ஒன்று சேர்ந்து தனி யான ஒரே கூட்டணி யாக தத்தமது பிரதேசங் கள் சார்பாக வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கு முன்வர வேண்டுமென முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஹசன் அலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது.

இதன் மூலம் நமது நாட்டில் தற்போது வீரியமடைந்து வியாபித்து வரும் சிக்கலா னதும் ஆபத்தானதுமான அரசியல் கட்சிகள் சார்ந்த முரண்பாடுகளின் ஆடுகளங்களாக ...

வரி அமுலாக்கத்தில் விரைவில் திருத்தம்

நிதி அமைச்சர் அறிவிப்பு

(நா.தினுஷா)

வரி அதிகரிப்பு என்பது தொடர்ச்சியாக இருக்கப் போவதில்லை. சமூக பாதுகாப்பு வரி அதிகரிப்பில் சில சிக்கல்கள் இருக்கின்றன. எனவே, இந்த அமுலாக் கத்தில் காணப்படும் ஒருசில பகுதிகளை நீக்க எதிர்பார்த் துள்ளதாகவும் நிதி இராஜாங்க ... 02 பக்கம்

நீர்க் கட்டணம் அதிகரிக்கப்படும்

நாட்டில் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமானால் நீர்க் கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுமென தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நீர் விநியோகத்துக்கு அதிக மின்சாரம் உபயோகிக்கப்படுவதன் காரணமாக கட்டண உயர்வை மேற்கொள்ள வேண்டிவரும்... 02 பக்கம்

அரச நிறுவனங்களுக்கான செலவினங்கள் கட்டுப்பாடு

மேலும் ஒரு வருடத்துக்கு நீடித்தது அமைச்சு

பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு அரச நிறுவனங்கள் செலவு செய்வதை நிறுத்தும் உத்தரவு அடுத்த ஆண்டுவரை அமுலில் இருக்குமென நிதி அமைச்சு புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான செலவினங் களை அங்கீகரிக்கும் மற்றும் பொதுச் செலவினங்களை நிர்வகித்தல் என்ற தலைப்பில் நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவினால் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 02 பக்கம்

மது வருமானம்...

2020இல் 121 பில்லியன் ரூபா வருமானமும் திணைக்களத்துக்குக் கிடைத்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீர்க் கட்டணம்...

என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆகவே, மின் கட்டணம் உயர்த்தப்படும் பட்சத்தில் நீர்க் கட்டணத்தை கட்டாயம் அதிகரிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

அரசைத் தூற்றும்...

இவ்வாறு குறிப்பிட்டார்.

"அச்சுத் தாள்களுக்கான செலவினங்கள் அதிகரித்துள்ளன. அவற்றை நாம் அறிவோம். எனினும், நிதித்துறை, இறக்குமதி தொடர்பான தீர்மானங்களை மத்திய வங்கியே மேற்கொள்கிறது. மத்திய வங்கி, சுயாதீனமான நிறுவனமாகும். நாணயத்தை அச்சிடுவது தொடர்பிலும் மத்திய வங்கியே தீர்மானிக்கிறது. அவ்வாறான தீர்மானங்களில் அரசியல்வாதிகள் தலையிடுவதில்லை. ஆயினும் மக்கள் அரசாங்கத்தையே தூற்றுகிறார்கள்" - என அவர் மேலும் தெரிவித்தார்.

அரச நிறுவனங்களுக்கான...

இதன்படி, வருடாந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மூலம் ஒதுக்கப்படும் நிதி வரம்புகள் அடுத்த வருடத்திற்கு மிகையாகாத வகையில் செலவுகளை நிர்வகிப்பது அதிகாரிகளின் பொறுப்பு என வலுவாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடன்...

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லப் பகுதியை இராணுவ புலனாய்வுப் பிரிவு இராணுவம் ஒட்டுக்குழுக்கள் சூறையாடும் ஈனச்செயல் நடந்துகொண்டிருக்கின்றது. எனவே, தமிழ்த் தேசியக் கட்சிகள் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு தீர்வு கிடைத்தால் தான் பேச்சுவார்த்தைக்கு வருவோம் என ஜனாதிபதியிடம் தெரிவித்து கலந்துரையாடலை புறக்கணிக்கவேண்டும் - என தரவை மாவீரர் இல்ல ஏற்பாட்டுக்குழுத் தலைவர் லவக்குமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஊடக மையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (01) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லப் பகுதியில் கடந்த 30ஆம் திகதி 500இற்கும் மேற்பட்ட குழிகளை வெட்டி மரக்கன்றுகளை நாட்டுவதாகவும் அதனை வனவளத் திணைக்களம் செய்வதாகவும் மாவீரர் ஏற்பாட்டுக் குழுவான எனக்கும் நிதர்ஷன் ஆகியோருக்கு தொலைபேசி ஊடாக தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக வனவளத் திணைக்கள காரியாலயத்திற்கு சென்றபோது அதனை நாங்கள் வெட்டவில்லை என்றனர். இதனையடுத்து நாங்கள் அங்கு உடனடியாக சென்றபோது இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் ஒட்டுக்குழுக்களும் மற்றும் பிள்ளையான் கட்சியில் செயற்பாட்டில் இயங்குகின்ற கூளாவடியைச் சோந்தவர்களும் இணைந்து இந்தக் குழிகளை வெட்டிக் கொண்டிருந்தனர். நாங்கள் அதனைத் தடுத்து நிறுத்தினோம் அதன்பின்னர் 30ஆம் திகதி இரவு மீண்டும் குழிகள் வெட்டப்பட்டு மரக்கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன.

தரவை மாவீரர் துயிலும் இல்லம் மிகவும் முக்கியமானது. இந்த இடத்தில் இவ்வாறான ஈனச்செயல்களை கடந்த காலங்களில் செய்து கொண்டுவந்தார்கள். அப்போது இதனை யார் செய்துகொண்டுவந்தார்கள் என்று அறியமுடியாத சூழல் இருந்தது. ஆனால், இப்போது வெளிப்படையாக அப்பட்டமாக தெரியவந்துள்ளது. இராணுவ புலனாய்வும், இராணுவமும் ஒட்டுக்குழுக்களும் சேர்ந்து இதனைச் செய்கின்றனர் என்பது அம்பலமாகியுள்ளது.

இவ்வண்ணமாக செய்திகள் வருகின்றபோது மாற்றுக் கட்சிகள் தடுத்து நிறுத்தியதாக ஊடகங்கள் ஊடாக புலனாய்வுப் பிரிவினர் செயற்பட்டு அந்த செய்திகளை பொய்யான விதத்தில் பரப்பியிருந்தனர். அதனை செய்த ஊடகங்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஜனாதிபதி ரணில் எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னர் தமிழர்களுக்கு தீர்வு தருவேன் என்றும் அங்கு பேச்சுக்கு வாருங்கள் என்றும் சொல்லிவிட்டு இங்கு ஆயிரக்கணக்கான எமது புனிதர்களான மாவீரர்கள் புதைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களைச் சூறையாடுகின்ற வேலைத்திட்டத்தை மறைமுகமாக அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

இவ்வாறான நிலையில், தமிழ்த் தேசிய நிலப்பரப்பில் பயணிக்கின்ற தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ்த் தேசிய உணர்வாளர்கள், தமிழ் தேசத்தில் மண்பற்றுள்ள அனைவரும் ஒன்று கூடவேண்டும். ஏனென்றால் இவ்வாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் ஈனச்செயல்கள் நடந்து கொண்டிருக்கின்ற நிலையில், தமிழ்த் தேசியக் கட்சிகள் பேச்சுவார்த்தைக்கு போவார்களாக இருந்தால் அவர்கள் கண்டிக்கப்பட வேண்டும்

அதேவேளை, மாவீரர் துயிலும் இல்லத்திற்கு தீர்வு கிடைத்தால்தான் பேச்சுக்கு வருவோம் அல்லது வரமாட்டோம் என பேச்சுவார்த்தையில் இருந்து வெளியேறவேண்டும். இதனை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

இது எங்கள் புனித மண். தமிழர்கள் வாழுகின்ற பூமி. அந்த பூமியை மீட்டெடுக்க வேண்டிய கட்டாய கடமைகளும் பொறுப்பும் உத்தரவாதமும் எங்களுக்கு இருக்கின்றது. எனவே, மாவீரர் துயிலும் இல்லத்தை மீட்பதற்கான போராட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை 10 மணிக்கு மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெறும்

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ்த் தேசிய உணர்வாளர்கள், மண்பற்றாளர்கள் சிவில் சமூகங்கள், மதகுருமார்கள், புத்திஜீவிகள், மாவீரர் குடும்பம், பெற்றோர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் - என்றார்

அமைச்சரவைக்கு...

செல்லத் தயாராக இருக்கிறோம். அவ்வாறு இல்லாமல் பரிந்துரைகள் கோரப்படுமாக இருந்தால் அதற்கு ஆலோசனைகளை பெற்றுக்கொடுப்போம். எனவே, இந்த வாரம் வெளியாகவுள்ள அமைச்சரவை முடிவுகளை பொறுத்தே பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இறுதித் தீர்மானத்தை எடுக்குமென அந்த ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அதன் தலைவர் ஜனக்க ரத்நாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தால் முனமொழியப்பட்டுள்ள புதிய மின்கட்டணத் திருத்தத்தின் பிரகாரம், மின்கட்டணம் 500 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தத் திருத்தத்தினூடாக சிறுமுயற்சியாளர்களுக்கான மின் கட்டணம் 125 சதவீதத்தாலும், பாரியளவான வியாபார உற்பத்தியாளர்களுக்கான கட்டணத்தை மீண்டும் 150 வீதத்தாலும் சுற்றுலா ஹோட்டல்களுக்கான மிக் கட்டணத்தை 150 சதவீதத்தாலும் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார்.

மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்து, அதனூடாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவுக்கு கட்டளை பிறப்பிக்கப்போவதாக தெரிவிக்கப்படுகின்றது. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டம் மற்றும் மின் கட்டண சட்டத்தின் பிரகாரம், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் மாத்திரமே மின் கட்டண அதிகரிப்பை மேற்கொள்ள முடியும். அமைச்சரவை அனுமதிபெற்று கட்டளை பிறப்பிக்கவேண்டிய அவசியமில்லை. அவ்வாறான கட்டளைகளை ஏற்றுக்கொள்ளவும் நாங்கள் தயாராக இல்லை.

மின்கட்டண அதிகரிப்புக்கென தனியான வழி முறைகள் இருக்கின்றன. எனவே, இதுதொடர்பில் மக்கள் தேவையின்றி அச்சம்கொள்ளத் தேவையில்லை. நான்கு மாதங்களுக்கு முன்னரே மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டது. மின்கட்டண அதிகரிப்புக்கு அவசியம் இல்லை என்ற நிலைப்பாட்டிலேயே தொடர்ச்சியாக இருக்கிறோம். காரணம், அதன் பின்னர் உலக சந்தையில் எரிபொருள், நிலக்கரி விலை அதிகரிக்கவோ ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடையவோ இல்லை.

ஓகஸ்ட் மாதத்தில் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்த நிலையில், மீண்டும் ஜனவரி மாதத்தில் அதிகரிக்கவேண்டியது அவசியமா என்பது குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். மின்சார சபைக்கு கடந்த காலங்களில் ஏற்பட்ட நட்டம், எதிர்காலத்தில் நிலக்கரி மற்றும் எரிபொருள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்கான அவசியம், எரிபொருள், நிலக்கரி என்பவற்றை கொள்வனவு செய்வதற்கான முற்பணத்தை மின்சார சபையே தேடிக்கொள்ள வேண்டும் ஆகிய நிலைப்பாடுகளுக்காக இதனை செய்ய முடியாது.

எரிபொருள் மற்றும் நிலக்கரி என்பவற்றை இறக்குமதி செய்ய, கடந்த 10 – 12 வருடங்களாக கடைப்பிடித்த நடைமுறையைப் பின்பற்றுதல், சாதாரண விலையில் மூலப்பொருட்களைப் பெறுதல், மறுசீரமைக்கக்கூடிய மின்னுற்பத்தியை மேம்படுத்துதல் போன்ற முறைகளினூடாகவே மின் கட்டணத்தை அதிகரிக்காமலிருக்க முடியும்.

மின்சார சட்டத்துக்கு முரணாக கட்டணத்தை அதிகரிக்க இடமளிக்கமாட்டோம். இந்த வாரம் வெளியாகவுள்ள அமைச்சர வைத் தீர்மானத்துக்கமைய எங்களின் தீர்மானத்தை அறிவிப்போம். அதேபோன்று கட்டணம் அதிகரிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் இல்லை. மின்சார சபையால் அதற்கான யோசனை எங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டால் மாத்திரமே அதுதொடர்பில் ஆராய முடியும். அசாதாரண முறையில் அதிகரிப்பை மேற்கொள்ள முயற்சித்தார்களானால் நீதிமன்றத்துக்குச் சென்று, அதனை தடுத்து நிறுத்துவோம். அடிப்படை உரிமைகள் மீறப்படும் பட்சத்தில் மக்களும் நீதிமன்றத்தை நாடமுடியும். அவர்களின் கோரிக்கையை அடிப்படையாகக்கொண்டு எங்களின் இறுதி தீர்மானத்தை எடுப்போம் - என்றார்.

மின் கட்டணம்...

பாவனையாளர்களின் நிலையான கட்டணங்கள் ரூ. 120 முதல் ரூ. 400, 31-60 அலகு பாவனையாளர்களின் நிலையான கட்டணங்கள் ரூ. 240 முதல் ரூ. 550 , 61-91 அலகு பாவனையாளர்களின் நிலையான கட்டணம் ரூ. 360 முதல் ரூ. 650, 91-120 அலகு மற்றும் 120-180 யுனிட் பாவனையாளர்களின் நிலையான கட்டணங்கள் ரூ. 960 முதல் ரூ. 1,500. 181 அலகுகளுக்கு மேல் பயன்படுத்தும் நுகர்வோர் நிலையான கட்டணங்கள் ரூ. 1,500 முதல் ரூ. 2000 வரை அதிகரிக்கும்.

மேலும், கடந்த ஓகஸ்டில் மின்கட்டண உயர்வு செய்யப்பட்டு நான்கு மாதங்கள் மட்டுமே ஆகியுள்ளபோதிலும், மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றொரு கட்டண உயர்வை மேற்கொள்கிறது. இதனால் பொதுமக்களின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படவுளள்து.

எனினும், இவ்வாண்டு மின்வெட்டை அமுல்படுத்தாமல் இருப்பதானால் இந்த உயர்வு அவசியம் என்று அமைச்சு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், மின்கட்டண உயர்வை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கடுமையாக எதிர்த்து வந்துள்ளது. அதன் தலைவர் ஜனக ரத்நாயக்க, மின்சார சபையின் கட்டண உயர்வுக்கான கோரிக்கையை அங்கீகரிக்குமாறு அறிவுறுத்தும் எந்தவொரு அமைச்சரவைக் கட்டளையையும் பின்பற்றுவதற்கு கடமைப்படவில்லை என்று வலியுறுத்தியுள்ளார்.

"கடந்த நான்கு மாதங்களுக்குப் பிறகு மற்றொரு கட்டண உயர்வுக்கு எந்த அடிப்படையும் இல்லை. எப்படியும் மின்சார சபை கடந்த கட்டண உயர்வுக்குப் பிறகு செயல்பாட்டு லாபத்தை ஈட்டுகிறது" என்று அவர் கூறினார்.

நிலக்கரி ஏற்றுமதிக்கு பணம் செலுத்துதல் மற்றும் ஓகஸ்ட் மாதம் வரை ஏற்பட்ட இழப்புகளை மீட்பதற்காக இந்த புதிய உயர்வு முன்மொழியப்படுவதாக ரத்நாயக்க கூறினார்.

"வழக்கமான மற்றும் தன்னிச்சையாக கட்டணங்களை பொதுக் கலந்தாய்வு கூட இல்லாமல் அதிகரிக்க முயற்சித்தால், அதைத் தடுக்க நாங்கள் சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்" என்று அவர் கூறினார்.

1.6 மில்லியனுக்கும் அதிகமான நுகர்வோர் உள்ளனர், அவர்களின் மாதாந்திர மின் கட்டணம் தற்போது ரூ. 200 அல்லது அதற்கும் குறைவாக இருக்கும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர்கள் குறைந்த வருமானம்கொண்ட குழுக்களைச் சேர்ந்தவர்கள், அவர்கள் கட்டணங்களில் மானியங்களைப் பெறுகிறார்கள், ஆனால், அத்தகைய ஒவ்வொரு அலகுக்கும் உற்பத்திச் செலவு அதிகமாக உள்ளது மற்றும் திறைசேரி இனி இந்த செலவை ஈடுசெய்ய தயாராக இல்லை என அவர் வெளிப்படுத்தினார்.

கூடுதலாக, திறைசேரியானது மத ஸ்தலங்கள், பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளுக்கு மின்சார மானியங்களை வழங்குகிறது.

"ஒட்டுமொத்தமாக, திறைசேரி ரூ. 300 பில்லியன் மின்சார மானியம் வழங்கியது. இது இனி நீடிக்காது. கட்டண உயர்வு அமல்படுத்தப்பட்டால், மின்சார சபை நுகர்வோருக்கு மீண்டும் தடையில்லா மின்சாரத்தை வழங்க முடியும்" என்று அந்த அதிகாரி கூறினார்.

படையினரின்...

மிரட்டல் உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்காக இலங்கை அதிகாரிகளால் தேடப்பட்ட இம்ரான், 2019இல் டுபாயில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். இந்நிலையில், அவர் கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்டிருந்ததுடன் அண்மையில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு பிணையில் வெளிவந்த பிறகு இம்ரான் இந்தியாவுக்குள் நுழையத் திட்டமிட்டுள்ளதாக மத்திய புலனாய்வு அமைப்புகள் மற்றும் நம்பகரமான ஆதாரங்களிலிருந்து மாநில உளவுத்துறைக்கு தகவல் கிடைத்திருந்தது.

அவர் மாறுவேடத்தில் நீதிமன்றத்தை விட்டு வெளியேறியதாகவும், பின்னர் தலைமன்னாருக்குச் சென்றதாகவும், அங்கிருந்து இந்தியாவுக்குள் ஊடுருவுவதற்கான ஏற்பாடுகளை அவரது நண்பர்கள் செய்வதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"இம்ரான், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானை தளமாகக்கொண்ட ஹெரோயின் மற்றும் கொக்கெயின் விநியோகஸ்தர்களுடன் வலுவான தொடர்புகளைக்கொண்ட ஒரு போதைப்பொருள் மன்னன். இவர் இலங்கையில் பல வழக்குகளை எதிர்கொண்டுள்ளார். மாக்கந்துர மதுசினால் 2019இல் டுபாயில் நடந்த பிறந்தநாள் விழாவில் இம்ரான் கலந்து கொண்டபோது சிக்கியிருந்தார். அவரது கும்பல் கடல் எல்லை வழியாக போதைப்பொருள் கடத்தலில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது" என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தி இந்துவிடம் சனிக்கிழமை தெரிவித்தார்.

இம்ரான் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றது குறித்து இலங்கையிலிருந்து முறையான தகவல் இல்லை என்றாலும், உளவுத்துறை அதிகாரிகள் அவரது இயக்கம் குறித்து நம்பகமான உள்ளீட்டைப் பெற்று எச்சரிக்கை விடுத்ததாக மேற்கோள் காட்ட விரும்பாத அதிகாரி கூறினார்.

கிரிமினல் குற்றச்சாட்டை எதிர்நோக்கும் வெளிநாட்டினரை தங்கவைக்கும் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் இருந்து செயல்படும் இலங்கைப் பிரஜைகள் அடங்கிய சர்வதேச போதைப்பொருள் கும்பலை தேசிய புலனாய்வு முகமை அம்பலப்படுத்தியுள்ள பின்னணியில் இம்ரானின் தமிழக பிரவேசம் முக்கியத்துவம் பெறுகிறது.

குறிப்பாக, கடலோர மாவட்டங்களில் உள்ள கமிஷனர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள், பாதிக்கப்படக்கூடிய இடங்களில் கண்காணிப்பை அதிகரிக்கவும், சந்தேக நபரைக் கண்டுபிடிக்க தங்கள் உளவுத்துறை இயந்திரங்களை செயல்படுத்தவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இம்ரான் மற்றும் அவரது நண்பர்களின் நடமாட்டம் மற்றும் செயல்பாடுகளை என்ஐஏ கண்காணித்து வருவதாகவும், அவர் பாகிஸ்தானைச் சேர்ந்த ஹாஜி சலீம் மற்றும் கடலோரப் பகுதியில் உள்ள விழிஞ்சம் போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தல் வழக்கின் பிரதான சந்தேக நபரான குணசேகரன் என்கிற கன் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதாக புலனாய்வாளர்கள் நம்புவதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. மார்ச் 25, 2021 அன்று விழிஞ்சம் கடற்பகுதியில் 'ரவிஹன்சி' என்ற கப்பலில் இருந்த ஆறு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 301 கிலோ ஹெரோயின், ஐந்து மி.மீ. 47 துப்பாக்கிகள் மற்றும் 1000 9 மி.மீ. தோட்டாக்களை பாதுகாப்பு முகவர் கைப்பற்றினர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இலங்கை பொலிஸாரோ, உளவுப் பிரிவோ இதுபற்றி எந்த அறிவிப்பும் விடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக சேவகர் அப்ளல் ஹாஜியார் காலமானார்

(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளை, மருதானை அரப் வீதியைச் சேர்ந்த முனவ்வருல் அப்ளல் ஹாஜியார் நேற்று (01-01-2023) தர்கா நகரில் காலமானார்.

இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலின் முன்னாள் தர்மகர்த்தாவான இவர், பேருவளை நகரபிதா மஸாஹிம் முஹம்மதின் சகோதரரும் முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் தேசமான்ய பாக்கீர் மாக்காரின் மருமகனும் முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் மைத்துனருமாவார்.

ஷாதுலிய்யாத் தரீக்காவின் மூத்த இஹ்வான்களில் ஒருவரான இவர், இத் தரீக்காவின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்தார். அத்தோடு தப்லீக் ஜமாஅத் தஃவா பிரசாரப் பணியிலும் மும்முரமாக ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. சுமார் 40 வருடங்களுக்கும் மேலாக தப்லீக் ஜமாஅத் தஃவா பணியில் கடுமையாக தியாகத்துடன் உழைத்த இவர், பேருவளையில் சிங்கள - முஸ்லிம் இன உறவைக் கட்டியெழுப்பவும் பாடுபட்டார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று (01-01-2023) மாலை தர்கா நகர் தெரு பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. சர்வமதத் தலைவர்கள், உலமாக்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், ஷாதுலிய்யா கலீபாக்கள், தப்லீக் ஜமாஅத் முக்கியஸ்தர்கள், பெருமளவிலான பொதுமக்கள் ஜனாஸாவில் பங்குபற்றினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கும் எந்தத் தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் எனத் தெரிவித்து புதுவருட தினமான நேற்று வவுனியா ஏ-09 வீதியில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(படப்பிடிப்பு: வவுனியா செய்தியாளர்)

வாகன இலக்கத்தகடுகளில்...

சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்யும் தீர்மானம் நேற்றுமுதல் (01) அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது அமைச்சர் பந்துல குணவர்தன இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வருடத்தில் பதிவுசெய்யப்படும் வாகனங்களுக்கு வழங்கப்படும் இலக்கத் தகடுகளில் இனிமேல் மாகாணங்களுக்கான குறியீட்டை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது நேற்றுமுதல் (01) நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இதுவரையில் வெளியிடப்பட்ட வாகன இலக்கத்தகடுகளிலுள்ள மாகாண குறியீடுகள் பொறிக்கப்பட்டிருக்கும். அதுதொடர்பில் சிக்கல்கள் எதுவும் ஏற்படப்போவதில்லை. இருந்தபோதும், வாகனமொன்றை இன்னுமொரு மாகாணத்தை சேர்ந்தவருக்கு விற்பனை செய்தால் புதிய இலக்கத் தகட்டில் மாகாண குறியீடு பொறிக்கப்படாது.

ஒரு வருடத்தில் வாகனமொன்று ஒருசில சந்தர்ப்பங்களில் 1 – 5 மாகாணங்களுக்கு விற்பனை செய்யப்படும் நிலை காணப்படுகிறது. அதனால், குறித்த வாகனங்கள் கைமாறும் மாகாணத்துக்கு ஏற்றவாறு இலக்கத் தகடுகளை திணைக்களம் வெளியிடுகிறது. இருந்தபோதும், வாகன உரிமையாளர்கள் தகடுகளை பெற்றுக்கொள்ளாதபட்சத்தில், திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தகடுகள் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் திணைக்களத்தில் தேங்கியுள்ளன. இந்த நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்காகவும், செலவை குறைப்பதற்காகவுமே இந்த மாற்றத்தை கொண்டுவர எதிர்பார்த்துள்ளோம்.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் பிரதி என்ற பெயரில் வெளியிடப்படும் மோட்டார் வாகனங்கள் உடைமை மாற்ற அறிவித்தலிலுள்ள (MTA 6) 24 பக்கங்களை 12 பக்கங்களாக குறைக்க தீர்மானித்துள்ளோம். இதனூடாக உடைமை மாற்றத்தை இலகுபடுத்தவும், அச்சு செலவினத்தைக் குறைத்துக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். இதன் மூலம் மேலும் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நேற்றுமுதல் (01) இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சாரதிகள் 24 குற்றங்களை இழைப்பார்களாக இருந்தால் அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரத்தை ஒரு வருடத்துக்கு இரத்துச்செய்யவும், உடல் குறைபாடு கொண்டவர்களுக்கு வாகன அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. காது கேட்கும் திறன் குறைந்தவர்கள் 6 – 8 இலட்சம் வரையானவர்கள் நாட்டில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியே இந்தத் தீர்மானம் நேற்றுமுதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சபாரி வாகனங்களை பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் நாடுபூராகவுமுள்ள வாகனம் பழுதுபார்க்கும் இடங்களை தரப்படுத்தி அவற்றை அனுமதிப் பெற்ற அமைப்புகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மோட்டார் வாகன திணைக்களத்தின் ஆணையாளர்நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க சுட்டிக்காட்டினார்.

வரி அமுலாக்கத்தில்...

அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மதுவரித் திணைக்களத்தின் எம்பிலிபிட்டிய கிளைக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வரிகுறைப்பின் காரணமாக கடந்த காலங்களில் அரச வருமானத்தைவிட செலவுகள் நூற்றுக்கு 200 – 300 வீதமாக அதிகரித்திருந்தன. எனவே, இதனை எவ்வாறு மீளச் செலுத்துவது. பணம் அச்சீடு செய்ய முடியாது. அவ்வாறு பணம் அச்சிட்டால் பணவீக்கம் வரையறைகளின்றி அதிகரிக்கும்.

அதற்கு இடமளிக்கவும் முடியாது. அதற்கு மாற்றுத்தீர்வு அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்வதாகும். நாட்டிலுள்ள அதிக வருமானம் பெறும் தரப்பினரை பார்த்தால், 10 சதவீமானவர்களே அதிக வருமானம் பெறுபவர்களாக இருக்கிறார்கள். எனவே, இவ்வாறு வருமானம் பெறும் 10 சதவீதமானவர்களிடம் மக்களின் பிரச்சினைகளுக்காக ஏதாவது ஒருசில அர்ப்பணிப்புகளை செய்யுமாறே கோருகிறோம். ஏனையவர்களை வாழவைக்குமாறே கூறுகிறோம். அந்த 10 சதவீதமானவர்களுக்கும் அது கடினமான விடயம் என்பது எங்களுக்குத் தெரியும். காரணம், அவர்களின் வருமானத்துக்கு ஏற்ற வீதங்கள் அமைந்துள்ளன.

ஆகவே, இதனை முகாமைத்துவம் செய்துகொள்ள வேண்டியதும் அவசியமாகும். இதனை சிறிதுகாலத்துக்கு பொறுத்துக்கொள்ள வேண்டும். வரி அதிகரிப்பு என்பது தொடர்ச்சியாக இருக்கப்போவதில்லை. முடிந்த முதலாவது சந்தர்ப்பத்திலேயே வரியை குறைத்து வரி செலுத்துபவர்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்கவும் எதிர்பார்த்துள்ளோம். ஆனால், அதுவரையில் இந்த சமூகத்தை வாழவைக்க வேண்டியதும் அவசியமாகும்.

சமூக பாதுகாப்பு வரியில் குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நானும் அறிவேன். எனவேதான், இந்த வரியில் சிக்கலாக இருக்கும் சில பகுதிகளை நீக்க எதிர்பார்த்துள்ளோம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கில் முஸ்லிம் ...

தமது பிரதேசங்கள் மாற்றமடையக்கூடிய விளைவுகளிலிருந்து அடுத்த ஐந்து வருட காலத்துக்கு நம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

ஒவ்வொரு உள்ளூராட்சி பிரதேசங்களிலுமுள்ள சமூக நலம் பேணும் அமைப்புகளின் பொறுப்பாளர்கள், அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், உலமாக்கள் மற்றும் ஆர்வமுள்ள இளைஞர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் முன்வந்து இவ்வாறான மாற்றத்துக்கான பாதையை வடிவமைக்க வேண்டும். அப்போதுதான் தேர்தல் காலங்களில் ஊடுருவும் வழக்கமான சமூகவிரோத சக்திகளின் தொல்லைகளிலிருந்து நமது பிரதேசங்களும் காப்பாற்றப்படும்.

பெரும் தேசிய தளத்தை மையமாகக்கொண்டு தற்போது கருக்கொண்டு பெருகி வருகின்ற வரலாறு காணாத அரசியல் பிரளயமானது குறிப்பாக வடக்கு, கிழக்கிலுள்ள சிறுபான்மை பிரதேசங்களை ஆக்கிரமிக்க ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

ஒருசிலரின் வாழ்வுக்கும் வசதிக்கும் வளம் சேர்ப்பதற்காக பெரும் தேசிய அரசியலின் பங்காளிகளாக அதிக காலங்களைக் கழித்து அவ்வப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கங்களை பலப்படுத்துவதற்கும் காப்பாற்றுவதற்கும் என்று நமது பெறுமதி மிக்க பேரம் பேசும் சக்திகளை ஏற்கனவே காவு கொடுத்து ஏமாந்த வரலாறுகள் இனி புதைக்கப்பட வேண்டும்.

நாம் தற்போது எதிர்கொள்ளவுள்ளவிருக்கும் இத்தேர்தலானது நமது வாக்குகளால் நம்மவர்களைத் தேர்ந்தெடுத்து நமது பிரதேசத்தைத்தை நாமே ஆட்சி செய்வதற்கான தேர்தலாகும் எனத் தெரிவித்துள்ளார்.

மன்னாரிலிருந்து கொழும்பு சென்ற இ.போ.ச. பஸ்ஸில் போதைப்பொருள்

(மன்னார் நிருபர்)

தலைமன்னாரிலிருந்து நேற்று வெள்ளிக்கிழமை இரவு கொழும்பு நோக்கிப் பயணித்த அரச பஸ்ஸிலிருந்து ஒரு தொகுதி ஐஸ் போதைப்பொருளை பேசாலை பொலிஸார் மீட்டுள்ளனர்.

தலைமன்னாரிலிருந்து கடந்த வெள்ளிக் கிழமை (30) இரவு 7.30 மணியளவில் அரச பஸ் ஒன்று பயணிகளுடன் கொழும்பு நோக்கி பயணித்தது.

இதன்போது இரவு 8 மணியளவில் பேசாலை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக அதன் பொறுப்பதிகாரி எச்.எம்.கே.ஹேரத், உதவி பொலிஸ் பரிசோதகர் ஏ.எஸ்.ஆனந்த் ஆகியோர் தலைமையிலான பொலிஸார் குறித்த பஸ்ஸை இடைநிறுத்தி சோதனைக்குட்படுத்தினர்.

இதன்போது குறித்த பஸ்ஸின் பின் ஆசனத்தின் இருக்கையின் கீழ் காணப்பட்ட பொதி ஒன்றை மீட்டனர். குறித்த பொதியை சோதனை செய்தபோது அதில் ஐஸ் போதைப்பொருள் காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

சுமார் 95 கிராம் நிறையுடைய ஐஸ் போதைப் பொருளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பேசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து பின்னிருக்கையில் இருந்த பயணி ஒருவர் மற்றும் சாரதி, நடத்துனர் ஆகியோரை பேசாலை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைக்குட்படுத்தினர்.

சுமார் 2 மணித்தியாலங்களாக இடம்பெற்ற விசாரணையின் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இதனால் குறித்த பஸ்ஸில் பயணித்த பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்த நிலையில் தமது பயணங்களை தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

மாதகலில் இருந்து நந்திக்கொடியுடன் பாதயாத்திரை

அகில இலங்கை சைவ மகா சபையினரால் வருடா வருடம் திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்படும் பாதயாத்திரை மாதகல் சம்பிலுதுறை சம்பூதாத ஈஸ்வரத்திலிருந்து காரைநகர் ஈழத்து சிதம்பரத்தை நோக்கி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகியது.

நந்திக்கொடியுடன் பக்த அடியார்கள் சிவனுடைய நாமங்களை உச்சரித்தும் பாராயணம் செய்தும் கீர்த்தனைகளைப் பாடிய வண்ணம் பாதயாத்திரையில் ஈடுபட்டனர்.

சாந்தை சிதம்பரேஸ்வரர் ஆலயம், சாந்தை வீரபத்திரர் ஆலயம், பனிப்புலம் முத்துமாரியம்மன் ஆலயம், சுழிபுரம் பறாளாய் பிள்ளையார் முருகன் ஆலயம், சுழிபுரம் மத்தி கறுத்தனாதோட்டம் துர்க்கையம்மன் ஆலயம், சுழிபுரம் மேற்கு ஹரிகர புத்திர ஐயனார் ஆலயம், சுழிபுரம் மேற்கு கதிர்வேலாயுத சுவாமிகள் ஆலயம், சுழிபுரம் பெரியபுலோ வைரவர் ஆலயம், மூளாய் வதிரன்புலோ பிள்ளையார் முருகன் ஆலயம், மூளாய் இராவணேசுவரர் ஆலயம், வலந்தலை மடத்துக்கரை முத்துமாரியம்மன் ஆலயம் ஆகிய திருத்தலங்களை தரிசித்தவாறு காரைநகர் ஈழத்து சிதம்பரத்தை சென்றடைந்து நிறைவுபெற்றது.

யாழ். போதனா பிரதிப் பணிப்பாளர் ஓய்வு

யாழ். போதனா வைத்தியசாலையில் பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றிய வைத்தியர் ஸ்ரீபவானந்தராஜா கடந்த சனிக்கிழமை ஓய்வுபெற்றார். இவர் இக்கட்டான சூழ்நிலைகள் நிலவிய காலங்களில் வைத்தியசாலை நிர்வாக நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து சிறப்பாக கடமையாற்றி வைத்தியசாலையின் வளர்ச்சியில் கணிசமான பங்கை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றபோது பதில் பணிப்பாளராக ஸ்ரீபவானந்தராஜா செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது .

யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபர் கே.மகேசன் நேற்று இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக கொழும்பில் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார். அமைச்சின் முன்னாள் செயலாளர் டொக்டர் அமல் டி. சில்வா உட்பட்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation
AA- (lka) ஃபிட்ச் ரேட்டிங், AAA- பிராண்ட் ஃபினான்ஸ் ரேட்டிங்
மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விநோதா மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 86 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜனவரி 02ஆம் திகதி, திங்கட்கிழமை

நேபாள புதிய பிரதமரின் நிச்சயமில்லா ஆட்சி

மன்னராட்சியிலிருந்து விடுபட்டு, ஜனநாயகத்துக்கு மாறிய நேபாளம், கடந்த 15 ஆண்டுகளில் எட்டு பிரதமர்களையும், ஒரு முறை உயர்நீதிமன்ற நீதிபதி இடைக்காலப் பிரதமராகச் செயற்பட்டதையும் பார்த்துவிட்டது. சந்தர்ப்பவாத அரசியல் என்பது நேபாளத்துக்குப் புதிதொன்றுமல்ல. நேபாள காங்கிரஸ் தலைவர் ஷேர் பகதூர் தேவுபா, நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) தலைவர் புஷ்ப கமல் தஹால் என்கிற பிரசண்டா, நேபாள கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் தலைவர் கே.பி.சர்மா ஓலி ஆகியோர் ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் பிரதமர்களாக இருந்திருக்கிறார்கள்.

அதனால், நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) தலைவர் பிரசண்டா ஆளும் கூட்டணியிலிருந்து விலகி, எதிர்க்கட்சித் தலைவர் கே.பி.சர்மா ஓலியுடன் இணைந்து, பிரதமராகியிருப்பது வியப்பை ஏற்படுத்தவில்லை. பதவிக்காக அணி மாறுவது என்பது பிரசண்டாவுக்குப் புதிதொன்றுமல்ல என்பதால், இதை திகட் திருப்பம் என்று கூறிவிட முடியாது.

ஓராண்டுக்கு முன்னர் பிரதமராக இருந்த கே.பி.சர்மா ஓலி, தனக்குத் தந்திருந்த வாக்குறுதியை மீறி நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலை அறிவித்தபோது, அதைக் கடுமையாக எதிர்த்து, நேபாள காங்கிரஸ் தலைவர் ஷேர் பகதூர் தேவுபாவுடன் கைகோத்தவர் பிரசண்டா. அதனைத் தொடர்ந்து, ஆட்சி கலைக்கப்பட்டு தேர்தல் நடந்தது. நேபாள காங்கிரஸ், பிரசண்டாவின் சி.பி.என். (மாவோயிஸ்ட்) ஆகியவை இணைந்து அமைத்த ஐந்து கட்சிக் கூட்டணி, தேர்தலில் பெரும்பான்மை இடங்களைப் பெற்ற நிலையில்தான் இந்தத் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது.

275 உறுப்பினர்களைக் கொண்ட நேபாள நாடாளுமன்றத்தில், தனிப்பெரும் கட்சியாக 89 இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது நேபாள காங்கிரஸ். கே.பி.சர்மா ஓலி தலைமையிலான நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) 78 இடங்களிலும் பிரசண்டாவின் சி.பி.என். (மாவோயிஸ்ட்) வெறும் 32 இடங்களிலும் வெற்றி பெற்றிருக்கின்றன. அதிரடியாக செயற்பட்டு 2008இல் மன்னராட்சியை அகற்றிய ஹீரோவான பிரசண்டாவின் கட்சி, வெறும் 11 வீத வாக்குகளைத்தான் பெற முடிந்திருக்கிறது.

யாருக்கும் தனிப்பெரும்பான்மை இல்லாத நிலையில், கொள்கை ரீதியாக முரண்பட்ட கட்சிகளை இணைத்துக் கொண்டு இப்போது பிரசண்டா ஆட்சியமைத்திருக்கிறார். 275 உறுப்பினர்கள் கொண்ட அவையில் பிரசண்டா தலைமையிலான கூட்டணிக்கு 168 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பது என்னவோ உண்மை. ஆனால், முரண்களின் மொத்த உருவமாக அந்தக் கூட்டணி காட்சியளிக்கிறது.

1996 முதல் 2006ஆம் ஆண்டு வரையில், மன்னராட்சியை அகற்றுவதற்காகத் தலைமறைவு கெரில்லா யுத்தம் நடத்தியவர் புஷ்ப கமல் தாஹால் என்கிற பிரசண்டா. இப்போது மன்னராட்சி ஆதரவுக் கட்சியான ஆர்.பி.சியைத் தனது கூட்டணியில் அவர் இணைத்துக் கொண்டிருக்கிறார்.

சமூக ஊடகங்களின் மூலம் பிரசண்டா, ஓலி, தேவுபா உள்ளிட்ட அரசியல் தலைமைகளைக் கடுமையாக விமர்சிக்கும் தொலைக்காட்சி நட்சத்திரம் ரவி லமிசானேயின் ஆர்.எஸ்.பி. கட்சியைக் கூட்டணியில் சேர்த்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல, ரவி லமிசானே துணைப் பிரதமராகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு உள்துறை அமைச்சு வழங்கப்பட்டிருக்கிறது.

பிரதமர் பதவி அல்லது ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, அவைத் தலைவர் பதவிகள் என்கிற பிரசண்டாவின் பேரத்தை முன்னாள் பிரதமரும் நேபாள காங்கிரஸ் தலைவருமான ஷேர் பகதூர் தேவுபா மறுத்துவிட்டார். அதைத் தனக்கு சாதகமாக்கி, பிரசண்டாவுக்குப் பிரதமர் பதவியை விட்டுக் கொடுத்து, ஏனைய முக்கியமான அரசியல் சாசனப் பதவிகளைத் தனது கட்சிக்குப் பெற்றுக்கொண்டு விட்டார் கே.பி.சர்மா ஓலி. இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு பிரதமர் பதவியும் சுழற்சி முறையில் அவருக்குக் கிடைக்கும்.

கடந்த 14 ஆண்டுகளில் இதுவரை 13 ஆட்சிகளை நேபாளம் சந்தித்துவிட்டது. எந்தவோர் அரசும் தனது பதவிக் காலத்தை முழுமையாக்கியதில்லை. கம்யூனிச சித்தாந்தத்தைப் பின்பற்றும் கட்சிகள் இணைந்து ஆட்சியமைப்பதால், ஸ்திரத்தன்மை ஏற்படும் என்று செல்லிவிட முடியாது. 2018இல் சீனாவின் வற்புறுத்தலால் சர்மா ஓலியும் பிரசண்டாவும் தங்களது கட்சிகளை இணைத்தார்கள். அந்த ஒற்றுமை நிலைக்கவில்லை என்பது மட்டுமல்ல, ஓலியின் தலைமையிலான மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியிலிருந்து அவரது போக்கு பிடிக்காமல், மூத்த தலைவர்களான மாதவ் குமார் நேபாள், ஜலாநாத் கனல், பிம் பகதூர் ராவல் உள்ளிட்ட மூத்த தலைவர்களும் விலகினார்கள்.

தேர்தல் தெளிவான முடிவைத் தரவில்லை என்றாலும், மக்களின் மனநிலையைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது. வயதான, பழைய அரசியல்வாதிகளின் ஜாமர் அரசியல் மீது அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டிருப்பது தெரிகிறது. நேபாள வாக்காளர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் 18 முதல் 40 வயதுக்குட்பட்டவர்கள். அவர்கள் வழக்கமான அரசியல் கட்சிகளின் மீது நம்பிக்கை இழந்திருக்கிறார்கள்.

நாடாளுமன்றத்தில் 275 இடங்களுக்கு 860 கயேச்சைகள் போட்டியிட்டனர். 330 சட்டப்பேரவை இடங்களுக்கு ஆயிரத்துக்கும் அதிகமானோர் களமிறங்கினார்கள். பிரசண்டா, தேவுபா, ஓலி போன்றவர்களின் தலைமையிலான கட்சிகளுக்கு மாற்று தேடுகிறார்கள் மக்கள் என்பதைத்தான் அவை உணர்த்துகின்றன.

ஓலியை நம்பி ஆட்சியமைத்திருக்கிறார் பிரசண்டா. பிரதமராக அவர் எத்தனை காலம் தொடர்வார் என்பதை நிர்ணயிக்கப் போவது மக்களோ நாடாளுமன்றமோ அல்ல. முன்னாள் பிரதமர் கே.பி. சர்மா ஓலிதான். இங்கு இலங்கையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை நம்பி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானது போன்று அவர் பதவியில் நீடிப்பதும் மக்கள் அதிகாரத்தையோ அல்லது நாடாளுமன்றத்தையோ நம்பி அல்ல. ராஜபக்ஷக்களை நம்பித்தான் என்பது போலவும் இருக்கிறது நேபாள பிரதமரின் நிலைமை.

புத்தாண்டு, நம்பிக்கை, தீர்மானம்...

ஆர். வேல்முருகன்

மனித குலம் அறிந்திராத துயரமான அனுபவத்தைத் தந்தது 2020ஆம் ஆண்டு. அதற்கு முந்தைய ஆண்டின் இறுதியிலேயே சீனாவில் உருவாகிய கொரோனா வைரஸ், 2020ஆம் ஆண்டில் உலக நாடுகளில் பரவியது.

இதனால் உலக நாடுகளின் இயக்கமே பல மாதங்களுக்குத் தடைபட்டது. தனி மனிதர்கள் மட்டுமன்றி, நாடுகளின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. அனைவருமே ஏதாவது ஒரு வகையில் பாதிக்கப்பட்டு தங்கள் வாழ்வாதாரத்தை இழந்ததுடன், ஏராளமானோர் இன்னுயிரையும் இழந்தனர்.

கொரோனா பெருந்தொற்று கற்றுத்தந்த பாடங்கள் அதிகம். இதுவரை சேமிப்பைப் பற்றித் தெரியாதவர்கள்கூட இப்போது சேமிப்பதான் வாழ்வில் ஆதார ஸ்ருதி என்பதைப் புரிந்து சேமிப்புக்கு முக்கியத்துவம் தரத் தொடங்கியுள்ளனர். முகக்கவசம், தனிமனித இடைவெளி என வாழ்க்கை முழுவதும் பின்பற்றத்தக்க பல நல்ல வழிமுறைகளையும் கொரோனா வழங்கியுள்ளது.

கொரோனாவிலிருந்து உலகம் மீண்டுவிட்டதாக அறியப்பட்ட வேளையில், சீனா உள்ளிட்ட சில நாடுகளில் கொரோனாவின் தாக்கம் மீண்டும் கவலையை ஏற்படுத்துகிறது. இக்குழ்நிலையில், 2023ஆம் ஆண்டை புதிய உறுதிமொழியேற்று வரவேற்கலாம்.

ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் தந்து தினமும் உடற்பயிற்சி செய்யலாம். குழந்தைகளுக்கும் அவற்றைக் கற்றுத் தரலாம். வாழ்க்கைச் சமையை ஏற்று வழிநடத்திச் செல்வதற்குப் பொருள் தேடி இளமையைத் தொலைத்துவிட்டு திரும்பிப் பார்க்கும்போது முதுமையில் நரை தெரியும். அழகான வாழ்க்கையை ரசித்து வாழத் தெரியாமல் முதுமைப் பருவத்தில் எப்படி வாழ்க்கையை வாழவில்லை என்பதை அசைபோட்டு துயரம் அடைவோர் ஏராளம். அதை விடுத்து உங்களுக்கென தனி நேரம் ஒதுக்கி உறவுகள், நட்புகளுடன் மனம் விட்டுப் பேசுங்கள்.

இதன்மூலம் புத்துணர்வு பெற முடியும். புத்தாண்டிலாவது இதை முயற்சி செய்யலாம்.

மனித வாழ்க்கையில் நினைவுகளாகிப் போன சுவடுகளை என்றும் மறக்க முடியாது. எப்போதும் பழைய நிகழ்வுகள் நம்மை உயிர்ப்புடன் வைத்திருக்கும். தினமும் நாட்குறிப்பு எழுதுங்கள். இதில் முக்கியமானவர்களின் பிறந்த நாள் மற்றும் திருமண நாட்களைக் குறித்து வைத்து வாழ்த்துச் சொல்லுங்கள். முடிந்தால் பரிசளியுங்கள். இது மிகவும் மகிழ்ச்சிகரமாக அமையும். கிருஷ்ணனுக்கு நண்பன் குசேலன் அவல் கொடுத்தது போல் பரிசு சிறியதெனக் கவலைப்படக் கூடாது. அதைக் கொடுக்கும் மனம் விசாலமான அன்பைப் பொழிய வேண்டும். அதுதான் முக்கியம். இந்த நினைவுகள் காலம் முழுவதும் நம்மை உயிர்ப்புடன் எழுச்சியாக வைத்திருக்க உதவும்.

புத்தாண்டிலிருந்து நேர்மறையான எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். இது எப்போதும் நம்முடைய முன்னேற்றத்தை உயர்த்தும். பெரியவர்கள் எப்போதும் மகன், மகள் என பாசத்தைப் பிரித்துக் காட்டாதீர்கள். இது அவர்களின் குழந்தைகளிலும் எதிரொலிக்கும். இதன்மூலம் மன அமைதியைப் பெரியவர்கள்தான் இழப்பார்கள். குழந்தைகளின் மனதில் வெறுப்பை விதைக்காதீர்கள்.

ஒவ்வொருவருக்கும் ஒரு திறமை ஆழப் புதைந்து கிடக்கும். முடிந்தால் அதை ஊக்குவித்து திறமையை வெளிக்கொணர உதவுங்கள். நல்ல ஆசிரியர் ஒருவரைப் போல அதைச் செய்யுங்கள். அதுதான் குழந்தைகளின் மீதான அன்பைச் சொல்லும் மொழி. இது வீணையை மீட்டுவதைப் போல் எப்போதும் இனிய ராகங்களால் இல்லமும் உள்ளமும் நிறைந்திருக்க உதவி செய்யும். இல்லாவிட்டால் அபஸ்வரமாகத்தான் இருக்கும்.

தேவையான சில இடங்களில் நாணல்போல வளைந்து செல்லுங்கள். புயல் வந்தாலும் மழை வந்தாலும் கவலையில்லாமல் ஏதாவது ஒருபுறம் சாய்ந்து கொண்டிருக்க முடியும். ஆடிக் காற்றிலும் நாணல் யாருக்கும் கவலையில்லாமல் வளையும். ஆனால், மரங்களின் நிலை - எதிர்த்து நின்றால் வேரோடு பிடுங்கி எறியப்படும். இதை மனதில் வைத்து முடிந்த அளவு விட்டுக் கொடுக்கும் பண்பை வளர்த்துக் கொள்ளுங்கள்.

விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை. முகத்தில் புன்னகையை வளர்த்துக் கொள்ளுங்கள். நம்மைப் பிற உயிரினங்களிடமிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டுவது புன்னகைதான். எப்போதும் புன்னகை மலர்ந்திருக்கட்டும்.

ஆண்டில் சில நாட்களாவது குடும்பத்துடன் சுற்றுலா செல்லுங்கள். இது மனதில் என்றும் அழியாத கோலங்களாக, அகற்ற முடியாத நினைவாக இருக்கும். எப்போதும் அசைபோட்டுக் கொள்ளலாம். முடிந்தளவு அனைவரும் தினமும் ஒருவேளையாவது குடும்பத்துடன் உணவு உண்ணுங்கள். அப்போது தினமும் நடந்த நல்ல நிகழ்வுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். இது குழந்தைகள் வளர வளர எனக்காகக் குடும்பம் காத்திருக்கிறது என்பதைக் கற்றுத் தரும். இது பிணைப்பை அதிகப்படுத்தும்.

முதியவர்களுடன் நேரத்தைச் செலவிடுங்கள். ஆண்டுக்கு ஒருமுறையாவது அருகே உள்ள ஆதரவற்றோர் இல்லங்களுக்குச் சென்று அவர்களுடன் உறவாடுங்கள். அது அவர்களுக்கு மட்டுமல்லாமல், நமக்கும் புத்துணர்வு தரும். குழந்தைகளை அழைத்துச் சென்றால் அவர்களின் மனதில் கண்டிப்பாக மாற்றம் உண்டாகும். குழந்தைகள் எப்போதும் கெட்ட வார்த்தைகளைப் பேசுவதில்லை. கேட்கும் வார்த்தைகளைப் பேசி செய்யும் செயல்களையும் பார்க்கிறார்கள். குழந்தைகள் முன்னிலையில் பண்பான வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள்.

அவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டிய கடமை பெற்றோருக்கும் வீட்டின் பெரியவர்களுக்கும் உண்டு.

உலகத்துக்காகவும் எதிர்கால சந்ததியினர் வாழ்க்கை நன்றாக இருக்கவும் வாழ்நாளில் வாய்ப்பிருக்கும்போது மரங்களை நட்டுப் பராமரியுங்கள்.

உங்களுக்குப் பிறகும் அந்த மரம் உங்கள் பெயரைச் சொல்லும். இந்தத் தீர்மானங்களை 2023 புத்தாண்டில் எடுத்துக்கொண்டு, அவற்றைச் செயல்படுத்துவோம். நல்வழி காண்போம்.

(நன்றி - தினமணி)

நக்கல் நமசிவாயம்

பொருளாதாரத்த நிமிர்த்திறத விட தேர்தல எப்படி ஒத்திவைக்கலாம் எண்டுதான் ரணில் ஐயா கடுமையா யோசிக்கிறார் போல..!

இன்றைய நாளில்...

* 1782 - இந்தியாவிலிருந்து திருகோணமலையை நோக்கி அட்மிரல் எட்வர்ட் ஹியூஸ் தலைமையில் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பெனி திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.
* 1920 - ஐக்கிய அமெரிக்காவின் பல நகரங்களில் 6 ஆயிரத்துக்கும் அதிகமான கம்யூனிஸ்டுகள் என சந்தேகிக்கப்படுவோர் தொடர்பில் விசாரணையின்றி சிறை வைக்கப்பட்டனர்.
* 1954 - பத்மஸ்ரீ, பத்மபூஷண், பத்மவிபூஷண் ஆகிய விருதுகளை இந்திய அரசு அறிமுகப்படுத்தியது.
* 1955 - பனாமாவின் அரசுத்தலைவர் ஒசே அன்ரோனியோ ரெமோன் படுகொலை செய்யப்பட்டார்.
* 1959 - சந்திரனை நோக்கிய முதலாவது விண்கலம் லூனர்-1, சோவியத் ஒன்றியத்தால் விண்ணுக்கு ஏவப்பட்டது.
* 1993 - யாழ்ப்பாணக் கடல் தீரோரிப் படுகொலை: கிளாலி தீரோரில் 35-100 பயணிகள் இலங்கைப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
* 2004 - ஸ்டார்ட்ஸ் விண்கலம் வைல்ட்-2 என்ற வால்வெள்ளியை வெற்றிகரமாகத் தாண்டியது.
* 2006 - திருகோணமலை மாணவர்கள் படுகொலை: இலங்கையின் கிழக்கே திருகோணமலை, நிலாவெளி கடற்கரையில் 5 தமிழ் மாணவர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
2006 - மன்னாரில் இலுப்பைக்கடவையில் இடம்பெற்ற இலங்கைப் படையினரின் வான் தாக்குதலில் 8 சிறுவர்கள் உட்பட 15 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 40 பேர் படுகாயமடைந்தனர்.
2008 - விடுதலைப் புலிகளுக்கும் தனக்கு மிடையே 2002இல் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து வெளியேறுவதாக இலங்கை அரசு அறிவித்தது.

கனடா கப்பல் பயணத்தில் வெளியாகாத தகவல்கள்!

சொகுசுக் கப்பல் என ஏமாற்றிய ஏஜென்ஸி



கனடாவிற்கு கப்பல் பயணம் மேற்கொண்ட 303 இலங்கையர்களில் ஒரு தொகுதியினர் தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 151 பேர் கடந்த டிசம்பர் 28ஆம் திகதி நாடு திரும்பியிருந்தனர்.

அவர்களில் சிலர் 4 மாதங்களின் பின்னர் வீடு திரும்பினர். ஆனால், பெரும்பாலானவர்கள் 6 மாதங்கள் வரையான காலத்தை தென்கிழக்காசிய நாடுகளில் கழித்துள்ளனர். சிலர் 8 மாதங்களுக்கும் அதிகமான காலத்தை அங்கு கழித்துள்ளனர்.

தற்போது வீடு திரும்பியவர்கள் சிலர் பேசியபோது, வியட்நாமில் அகதி அந்தஸ்திற்காக காத்திருக்கும் காலத்தில் வட்டி, கடன் தொகை அதிகரித்து விடும் என்ற அச்சத்தில் நாடு திரும்பியதாக தெரிவித்தனர்.

காரணம், அவர்கள் அனைவரும் கடன் வாங்கியும், வீடு அல்லது காணிகளை அடமானம் வைத்து, இந்தப் பயணத்திற்காக பணம் திரட்டியுள்ளனர்.

இப்பயணத்திற்காக ரூ.20 இலட்சம் வழங்கிய இளைஞர் ஒருவர், தான் மாதாந்தம் ரூ.60,000 வட்டி செலுத்த வேண்டியுள்ளதாக தெரிவித்தார்.

அதிக பணம் செலுத்தியவர்களில் சொத்துகளை ஈடு வைத்தவர்களே பெரும்பாலும் நாடு திரும்பியதாகத் தெரிவித்தார்.

நாடு திரும்பியவர்கள், முன்னர் செய்த தொழில்களை மீள ஆரம்பிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட தொகை நிதியுதவி செய்வது தொடர்பான கோரிக்கையை தமது தலைமையகத்திற்கு விடுத்துள்ளதாக ஐ.ஓ.எம். அலுவலகத்தினர் தம்மிடம் தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மியன்மார் இராணுவத்தின் துணையுடன் பயணம்

தற்போது இராணுவ ஆட்சி நடந்து கொண்டிருக்கும் மியன்மாரில் இருந்து கடந்த ஒக்டோபர் 9ஆம் திகதி அதிகாலை 303 இலங்கையர்களும் கனடா கனவுடன் கப்பலேறினர்.

மியன்மாரின் யாங்கூன் நகரத்திலிருந்து சுமார் 2 மணித்தியால பஸ் பயண தூரத்திலுள்ள கடற்கரையொன்றிலிருந்து கப்பல் பயணம் ஆரம்பித்தது. மியன்மரில் பதிவு செய்யப்பட்ட லேடி ஆர்-3 என்ற சிறிய கப்பலில் கடல் பயணம் ஆரம்பித்தது.

கப்பல் பயணத்திற்காக கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்தே இலங்கையிலிருந்து ஆட்கள் விமானம் மூலம் மியன்மாருக்கு அழைத்து செல்லப்பட தொடங்கினர். கடந்த ஏப்ரலில் இருந்து சுமார் 6 மாதங்கள் மியன்மாரில் கப்பல் பயணத்திற்காக காத்திருந்த பலருடன் நாம் பேசினோம். இலங்கையிலிருந்து கொண்டு செல்லப்பட்டவர்கள் சிறுசிறு குழுக்களாக மியன்மாரில் சிறிய அறைகளில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அவர்களிற்கு மியன்மார் இராணுவத்தினாலோ, பொலிஸாராலோ சிக்கல் ஏற்படவில்லை.

இராணுவத்திற்கு இலஞ்சம் கொடுக்கப்பட்டுள்ளதால் யாரும் பயப்படத் தேவையில்லையென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருந்தனர்.

இலங்கையில் பல உள்ளூர் முகவர்கள் மூலம் ஆட்கள் திரட்டப்பட்டு மியன்மாருக்கு அழைத்து வரப்பட்டனர். 5 பேரை திரட்டுபவர் இலவசமாக பயணிக்க முடியும் என சலுகை வழங்கப்பட்டிருந்தது.

இந்த பயணத்திற்காக திரட்டப்படுபவர்களுடன், பிரதான ஏற்பாட்டாளர்கள் என கூறப்பட்டவர்கள் தொலைபேசியில் பேசினர். நாடு திரும்பியவர்களின் தகவலின்படி, 4 பிரதான ஏற்பாட்டாளர்கள் தம்முடன் தொலைபேசியில் பேசியதாக தெரிவித்தனர். இந்தோனேசியாவில் வசிக்கும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ரொமி, லாவோஸில் உள்ள இலங்கையரான வேலு பாய், கனடாவை சேர்ந்த சிங்கம், பிரித்தானியாவில் வசிக்கும் ரவி ஆகியோரே ஏற்பாட்டாளர்கள் என தம்முடன் பேசியதாக தெரிவித்தனர்.

இவர்கள் நான்கு பேர், வேறு பெயர்களையும் பாவித்து பேசி, தமது வலையமைப்பில் பலர் இருப்பதை போல காண்பித்து வந்தனர்.

சொகுசு கப்பல் - விரும்பிய உணவுகள் ஃப்ரீஸரில்

இந்த பயணத்திற்காக திரட்டப்பட்ட அனைவரிடமும் ஏற்பாட்டாளர்கள் சொன்ன ஒரே விடயம் இதுதான். "தம்பியவை ஒன்றுக்கும் பயப்பட தேவையில்லை. இன்டர்நெஷனல் தரத்திலான சுற்றுலா கப்பலில்தான் நீங்கள் போகப் போகிறீர்கள். 50 பேர் மட்டும்தான் ஏற்றப்படுவீர்கள். எல்லோருக்கும் தனித்தனி ரூம்கள். ஏறி அறையை பூட்டிவிட்டு படுத்தீர்கள் எனில், 10 நாளில் கனடா. தேவையான உணவு களை கப்பலில் ஏற்றிவிட்டோம். சம்பா அரிசி, சவ்வரிசி, குத்தரிசி என்பன உள்ளன. பன்றி, கோழி இறைச்சிகள் ஃபிரீஸரில் நிரப்பப்பட்டுள்ளன. மாமிசம் சாப்பிடாதவர்களுக்கு காலை உணவிற்கு அவல் ஏற்றப்பட்டுள்ளது. என்ஜோய் பண்ணிக்கொண்டு போய் சேருவீர்கள்" என்பதே அவர்கள் சொன்ன கதை.

இந்தோனேசியாவில் வசித்த ரொமி மியன்மாருக்கு வந்து, படகை வழியனுப்பும்வரை தங்கி நின்றார். மேற்படி கதைகளை சிரிக்காமல் சொன்ன ஆசாமியும் அவர்தான்.

யங்கூனில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்கள் 8ஆம் திகதி பின்னிரவு பஸ்களில் ஏற்றப்பட்டு, கடற்கரைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். 2 மணித்தியால பயணத்தில் கடற்கரையை அடைந்துள்ளனர்.அங்கு சென்ற போதுதான் எல்லோருக்கும் அதிர்ச்சி காத்திருந்தது. ஆக 50 பேர்தான் பயணிப்போம் என நினைத்துக் கொண்டு சென்றவர்கள், அங்கு பெருங்கூட்டம் கூடியிருப்பதை பார்த்து அதிர்ச்சியடைந்தனர்.

இரண்டாவது அதிர்ச்சி - அவர்களுக்கு காத்திருந்தது சுற்றுலா கப்பல்ல. மிகப்பழைய பொருட்களை ஏற்றும் கப்பல். அங்கு சென்ற பின்னர், பலர் கப்பலில் ஏற மறுப்பு தெரிவித்தனர். கப்பலில் ஏற மறுத்தவர்களை மிரட்டி கப்பலில் ஏற்றினர். 15 நாளில் கனடா சென்றுவிடலாம் தானே என மனதை சமாதானப்படுத்திக் கொண்டு கப்பலில் ஏறினர்.

ரொமி

கப்பல் புறப்படுவதற்கு முன்னதாக மியன்மாரில் தங்கியிருந்த போது, யாரும் தன்னை புகைப்படம் எடுக்கக்கூடாது என்பதில் ரொமி எச்சரிக்கையாக இருந்தார். எனினும், அங்கு ரொமி சாவகாசமாக உட்கார்ந்து தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த போது ஒருவர் சூட்சுமமாக புகைப்படம் எடுத்தார்.

புகைப்படத்திலிருப்பவரே ரொமியென குறிப்பிட்டு, இலங்கை திரும்பிய அகதிகள் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரிடம் அவரது புகைப்படத்தை வழங்கியுள்ளனர்.

கப்பலுக்குள் 13 சண்டியர்கள்

303 பேருக்கும் 50 மூட்டை அரிசியும் 15 கிலோகிராம் உப்பும் 25 டின்மீன்களுமே உணவாக ஏற்றப்பட்டன. உப்பில்லாத கஞ்சியை சிறிது சிறிதாக குடித்து சமாளித்துள்ளனர்.

கப்பல் சிறியது. அதிக பயணிகள். அனைவரும் சரியாக உட்காரக்கூட இடமிருக்கவில்லை. ஒரு மாதம் உட்காரவும் இடமில்லாமல்தான் பயணித்தனர். தகவல் தெரிவித்த ஒருவர் , இலங்கையிலிருந்து புறப்பட்டபோது தனது பொதியில் 100 கிராம் சமபோசா பெக்கட் ஒன்று இருந்ததாகவும், 14 நாட்கள் அதை சிறிது சிறிதாக சாப்பிட்டதாகவும் தெரிவித்தார்.

கழிவுநீர் தேங்கும் சிறிய நீர் நிலையிலிருந்தே தண்ணீர் எடுக்கப்பட்டு கப்பலின் தண்ணீர் தாங்கியில் நிரப்பப்பட்டிருந்தது. அதை குடிப்பதற்கு முன்னர் மேலாடையில் 5 அல்லது 6 முறை வடிப்பதாகவும், அதன் பின்னரும் வாடை தீராது என ஒருவர் குறிப்பிட்டார். அதை நாக்கில் நனைத்து உயிர் வாழ்ந்ததாக தெரிவித்தார்.

கப்பல் புறப்படுவதற்கு முன்னதாக, மியன்மாரில் வைத்து அகதிகளிடம் சவடால் விட்டுள்ளார் ரொமி. சன்சீ கப்பலையும் தாமே அனுப்பியதாக கூறியுள்ளார். கப்பலில் ஏறியதும், அனைவரது தொலைபேசிகளையும் வாங்கி வைத்துவிட்டனர்.

இந்தக் கப்பல் பயணத்தில் சுமார் 13 பேர் முக்கிய கதாபாத்திரம் வகித்தனர். கப்பலை செலுத்தியவர்கள் தவிர, சுமார் 5 பேர் கப்பலை கட்டுப்படுத்தினர். ஏற்பாட்டாளர்களின் உறவினர்கள் மற்றும் அதிகமானவர்களை பயணத்திற்கு அழைத்து வந்தவர்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் அவர்கள் அந்த பாத்திரத்திற்கு நியமிக்கப்பட்டனர். அவர்கள்தான் அகதிகளுடன் தொடர்புபட்டனர். கப்பலை கட்டுப்படுத்தியவர்கள் கப்பலின் மேல் தளத்தில் இருந்து கொண்டனர். ஏனையவர்கள் கீழேயிருந்தனர். மேலேயிருந்தவர்கள் நன்றாக சமைத்து சாப்பிட்டவாறு இருந்தனர்.

கப்பலில் இருந்தவர்களை கட்டுப்படுத்திய 5 பேரும் மிக மோசமாக நடந்து கொண்டுள்ளனர். கோப்பாய், மல்லாகம், பளை உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்தவர்களே கப்பலில் இருந்தவர்களை கட்டுப்படுத்தினர். இந்த 5 பேரில் ஒருவரான தனது உறவினர் ஒருவரிடம், ஒரு கையடக்க தொலைபேசியையும், பிலிப்பைன்ஸ் சிம் கார்ட் ஒன்றையும் ரொமி வழங்கியிருந்தார். அதன்மூலம், இவர் ரொமியுடனும் குடும்பத்தினருடனும் பேசி வந்தார். மேலேயிருந்தவர்களும் பேசி வந்தனர். ரொமி பயணம் பற்றிய வழிகாட்டல்களை வழங்கி வந்தார்.

கப்பல் முதல் 10 நாள் பயணத்தில் தாய்வானுகு அருகே வந்துள்ளது. எனினும், கப்பலை வழிநடத்திக் கொண்டிருந்த ரொமி தொலைபேசியில், "பசுபிக் கடலில் சூறாவளி ஏற்படப் போகிறது. வந்த வழியே திரும்பி பயணியுங்கள்" என வழங்கிய அறிவுறுத்தலின் அடிப்படையில் கப்பல் வந்த வழியே பயணித்தது.

கப்பலில் குழப்பம்

10 நாட்கள் கப்பல் வந்த வழியே பயணித்தது. தென்சீன கடலில் பயணித்தபோது, கப்பலில் சர்ச்சைகளும், குழப்பங்களும் ஏற்பட்டன. இது தொடர்பில் முன்னரே விரிவாக செய்தி வெளிவந்திருந்தது. ப்பல் சேதமடைந்து தண்ணீர் உட்புகத் தொடங்கிய பின்னரும், அங்கிருந்த தொலை பேசியில் உதவி தகவல் அனுப்பப்படவில்லை. மீன்பிடி ரோலர்கள் அந்த பகுதியால் வந்து சென்றபோது, அகதிகள் உள்ளே பதுங்கியிருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கப்பலின் நிலைமை மோசமான நிலையில், நவம்பர் 5ஆம் திகதியளவில், ரொனியின் உறவினரான இளைஞன் அந்த கையடக்க தொலைபேசியில் ரொமியுடன் பேசிக் கொண்டிருந்த போது, தொலைபேசியை தருமாறு கப்பலில் இருந்த இளைஞர்கள் சிலர் கேட்டுள்ளனர். அவர் அதற்கு மறுப்பு தெரிவித்து தொலைபேசியுடன் ஓடிச்சென்றுள்ளார். கப்பல் பயணிகள் அவரை விரட்டிச் சென்றனர். ரொமியின் உறவினரான இளைஞன் தொலைபேசியை குத்தி உடைத்து கடலில் வீச முயன்றுள்ளார். அதற்குள் அவரை மடக்கிப் பிடித்து, தொலைபேசியை பறித்து அதிலிருந்த சிம் கார்டை பயணிகள் எடுத்துக் கொண்டனர். தொலைபேசியை குத்தி உடைத்தவரை இளைஞர்கள் ஒன்று சேர்ந்து நையப்புடைத்தனர்.

அவர் ஏன் தொலைபேசியை உடைத்தார், தொலைபேசியில் மோசடி விவகாரம் பேசப்பட்டதா அல்லது கப்பலில் இருந்தவர்கள் உதவிகோரி தப்பிச் சென்றுவிடக்கூடாது என நினைத்தார்களா என பல கேள்விகள் உள்ளன.

கப்பலில் பயணித்த இளைஞன் ஒருவர் தனது தொலைபேசியை வழங்காமல் ஒளித்து வைத்திருந்தார். அந்த தொலைபேசியில், பிலிப்பைன்ஸ் சிம் கார்ட் இணைக்கப்பட்டே, கப்பலில் இருந்து உதவிகோரப்பட்டுள்ளது.

பின்னர், நவம்பர் 7ஆம் திகதி, ஜப்பானியக் கப்பலான ஹீலியோஸ் லீடர் கப்பலில் அகதிகள் ஏற்றப்பட்டு, வியட்நாமிற்கு அகதிகள் கொண்டு வரப்பட்டமை அனைவரும் அறிந்ததே.இதற்குள், தாய்வானுகு அருகிலிருந்த கப்பல் 10 நாட்கள் திரும்பி பயணித்தது பற்றி, கப்பலில் இருந்தவர்களிடம் பல்வேறு சந்தேகங்கள் உள்ளன. வியட்நாமில் தங்கியிருந்த 60 பேரை கப்பலில் ஏற்றிச்செல்லவே திரும்பி வந்ததாக அவர்கள் கூறுகிறார்கள்.

அட்டகாசம் செய்தவர்கள் அடித்து துவைப்பு

கப்பல் பயணம் தோல்வியடைந்தது, பெருந்தொகை பணத்தை இழந்தது, கப்பல் பழுதடைந்த பின்னரும் உதவி கோராமல் அனைவரையும் மரண ஆபத்தை ஏற்படுத்த முனைந்தது என, கப்பலில் பயணிகளை கட்டுப்படுத்திய 5 பேர் மீதும் பயணிகளின் கோபம் திரும்பியது.

வியட்நாம் இராணுவத்தினர், முன்னர் கொரோனா தொற்றாளர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த இடமொன்றில் கப்பல் அகதிகளை தங்க வைத்தனர். அங்கு வைத்து தினமும், அந்த 5 பேரும் சக பயணிகளால் தாக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலும் இரவு வேளைகளில் அடி விழும்.

வடிவேலுவின் நகைச்சுவையில் ஒரு குழு பொழுதுபோக்காக வடிவேலுவை அடித்துவிட்டு, மற்றொரு குழுவிடம் அடிப்பதற்காக அனுப்பி வைப்பதை போன்ற சம்பவங்களே அந்த 5 பேருக்கும் நிகழ்ந்தது. அடி அகோரமோ என்னவோ, 5 பேரில் 4 பேர் இலங்கை வந்து விட்டனர். விமானத்தில் புறப்படுவதற்கு முன்னரும், அங்கு தங்கியிருப்பவர்கள் கோபம் தீர ஒரு சுற்று அடி போட்டுவிட்டே அனுப்பி வைத்துள்ளனர்.

இலங்கை திரும்பியதும், அந்த 4 பேர் மீதும் விசேட விசாரணை நடத்தப்பட்டது. அவர்கள் சில நேரங்களில் மேலதிக விசாரணைகளை சந்திக்கலாம்.

சனிட்டைசர் குடித்தவரும் திரும்பி வந்தார்

வியட்நாமில் தங்க வைக்கப்பட்டிருந்த இரண்டு அகதிகள், இலங்கைக்கு அனுப்ப வேண்டாமென குறிப்பிட்டு கழிவறையை சுத்தம் செய்யும் திராவகத்தை உட்கொண்டு தற்கொலைக்கு முயன்றார்கள் எனவும் அதில் ஒருவர் உயிரிழந்தார் எனவும் முன்னர் செய்தி வெளியாகியிருந்தது. எனினும், அது தொடர்பில் தற்போது வேறு விதமான தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கைக்கு அனுப்ப வேண்டாமென குறிப்பிட்டு அவர் தற்கொலை செய்ததாக தகவல் வெளியானது, அகதிகள் தொடர்பான சர்வதேச பார்வையை மாற்ற உதவும் என யாரும் நினைத்திருக்கலாம். மறுவளமாக, உள்ளூரில் அவரது முடிவு விமர்சிக்கப்பட்டிருந்தது. 4 பிள்ளைகளின் தந்தை பொறுப்பற்ற முடிவு எடுத்ததாக பரவலான விமர்சனமிருந்தது. எனினும், அந்த விமர்சனம் தவறானது என வியட்நாமிலிருந்து திரும்பியவர்கள் கூறுகிறார்கள்.

நாடு திரும்பியவர்கள் வெளியிட்டுள்ள தகவல்

வியட்நாமில் அகதிகள் தங்க வைக்கப்பட்டிருந்த இடம் முன்னர் கொரோனா தொற்றாளர்கள் தங்கியிருந்த இடமாகும். அதனாலோ என்னவோ, அகதிகள் ஒவ்வொருவருக்கும் 1 லீற்றர் சனிட்டைசர் வழங்கப்பட்டிருந்தது. அதனையே இருவரும் பருகியிருந்தனர்.

வீடு, காணி, தொழில் நிலையங்களை விற்று கப்பல் ஏறியவர்கள், மோசமாக ஏமாற்றப்பட்ட பெருந்துயரத்தை அனுபவித்தனர். பலர் இரவில் தூக்கம் வராமல் துயரத்தில் தவித்துள்ளனர். இந்த பெரும் வேதனையை மறந்து நிம்மதியாக உறங்குவதற்காகவே அவர்கள் சனிட்டைசர் பருகியுள்ளனர் என்கிறார்கள் வியட்நாமிலிருந்து வந்தவர்கள்.

ஒருவர் சனிட்டைசரில் தண்ணீர் கலந்து பருகினார். மற்றையவர் சனிட்டைசரை சிறிது சிறிதாக பருகியுள்ளார். காலையில் அச்சத்துடன் காணப்பட்டவர், சிறிது நேரத்தின் பின் கறுப்பு நிற வாந்தி எடுத்துள்ளார். உடனடியாக வைத்தியசாலைக்கு இருவரும் அனுப்பப்பட்டனர். அதில் ஒருவர் உயிரிழந்தார். மற்றையவர் தப்பித்தார். தண்ணீர் கலந்து பருகியவரும் தற்போது யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளார்.

(நன்றி - தமிழ் பக்கம்)

மண்வெட்டியால் அடித்து பெண் ஒருவர் கொலை

மஹவிலச்சியவில் சம்பவம்

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுரம் மஹவிலச்சிய ஹெலம்பகஸ்வெவ பகுதியில் மண்வெட்டியால் அடித்துப் பெண் ஒருவரை கொலை செய்துள்ள சம்பவமொன்று பதிவாகியுள்ளதாக மஹவிலச்சிய பொலிஸார் தெரிவித்தனர்.மஹவிலச்சிய பேமடுவ ஹெலம்பகஸ்வெவ பகுதியில் டிச. 31ஆம் திகதி பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.மஹவிலச்சிய, பேமடுவ, ஹெலம்பகஸ்வெவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 76 வயதுடைய பெண் ஒருவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணுக்கும் சந்தேக நபருக்கும் இடையில் மிக நீண்ட நாட்களாக ஏற்பட்டு வந்த காணித் தகராறே இக்கொலைக்குக் காரணம் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இச்சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடய மேற்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியை வசிப்பிடமாக கொண்ட 52 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவிலச்சிய பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வடமாகாணத்தின் புதிய கல்விப் பணிப்பாளராக யோன் குயின்ரஸ்

வடமாகாணத்தின் புதிய கல்விப் பணிப்பாளராக ரி.யோன் குயின்ரஸ் வடமாகாண பிரதம செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

1986ஆம் ஆண்டு ஆசிரியராக இணைந்து கொண்ட குயின்ரஸ், பாடசாலை அதிபராக வும் அதன் பின்னர் பலாலி ஆசிரிய கலாசாலையின் அதிபராகவும் செயற்பட்டார்.

பின்னர் உதவிக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், தீவகம், மடு, துணுக்காய், கிளிநெச்சி ஆகிய பகுதிகளில் வலயக் கல்விப் பணிப்பாளர் எனச் செயற்பட்டார்.

பின்னர் 2013ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் ஒன்று அதிகாரியாக பதவி உயர்வு பெற்றார்.

வடக்கு மாகாண கல்வி அபிவிருத்தி, திட்டமிடல், நிர்வாகம் ஆகியவற்றின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக பதவி வகித்த நிலையில், தற்போது வட மாகாண கல்வி பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

சனிக்கிழமை 2022.12.31 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
மஹஜன சம்பத சீட்டிழுப்பு இலக்கம் 4986 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,443,200.00
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 2 6 4 9 7 5

கொவிசெத சீட்டிழுப்பு இலக்கம் 3228 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,151,762.80
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 41 42 72 75

ஜாதிக சம்பத சீட்டிழுப்பு இலக்கம் 1441 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,853,080.40
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள் 7 8 8 8 5 9

தன நிதானய சீட்டிழுப்பு இலக்கம் 1016 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 140,392,454.00
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 24 55 58 77

ராசி சுப பலன் Handahana சீட்டிழுப்பு இலக்கம் 295 வெற்றி இலக்கினம் மீனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00
வெற்றி இலக்கங்கள் 16 39 44 49 விசேட இலக்கினம் மீனம்

மெகா பவர் சீட்டிழுப்பு இலக்கம் 1334 அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 289,915,750.00
ஆங்கில எழுத்து U சுப்பர் இலக்கம் 10 வெற்றி இலக்கங்கள் 09 23 46 54
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

வெள்ளிக்கிழமை 2022.12.30 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
மஹஜன சம்பத சீட்டிழுப்பு இலக்கம் 4985 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,607,664.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 8 0 4 6 1 5

கொவிசெத சீட்டிழுப்பு இலக்கம் 3227 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,797,594.80
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 20 24 31 74

ஜாதிக சம்பத சீட்டிழுப்பு இலக்கம் 1440 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,792,293.20
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள் 9 1 9 6 3 8

தன நிதானய சீட்டிழுப்பு இலக்கம் 1015 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 140,185,645.60
ஆங்கில எழுத்து I வெற்றி இலக்கங்கள் 15 17 46 76

சீட்டிழுப்பு இலக்கம்: 294 இச் சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 33,089,885.20
இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 01 20 24 45 விசேட இலக்கினம் மீனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00
விஷேட ரன் வரம அதிர்ஷ்ட இலக்கம் 0326661 0754486 0379551 0902252 0377237
லக்ஷபதி அதிர்ஷ்ட இலக்கம் 49122

மெகா பவர் சீட்டிழுப்பு இலக்கம் 1333 அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 289,646,406.00
ஆங்கில எழுத்து Q சுப்பர் இலக்கம் 01 வெற்றி இலக்கங்கள் 03 29 62 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ஊவா மாகாண சபையின் கீழ் புதிய தலைவர்கள் பதவியேற்பு

(நடராஜா மலர்வேந்தன்)

ஊவா மாகாண சபையின் கீழ் இயங்கும் நிறுவனங்கள், திணைக்களங்கள் சிலவற்றின் தலைமைப் பதவிகளுக்கு புதிய நியமனங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (30) ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தலைமையில் ஊவா மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஊவா மாகாண சபையின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் தலைமைப் பதவி வகித்து ஓய்வுபெற்ற அதிகாரிகளின் இடத்திற்கு புதிய நிறுவனத் தலைவர்களின் நியமனம், வேறு சில நிறுவனங்களில் கடமையாற்றிய பதவிநிலை அதிகாரிகளுக்கு பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் என்பன இதன்போது வழங்கப்பட்டன.

இதன்படி, மாகாண விவசாய அமைச்சின் புதிய செயலாளர் பதவிக்கு ஊவா மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளராக கடமையாற்றிய காமினி மஹிந்தபால ஜோபில் நியமனம் பெற்றார். அத்துடன் வெலிமடை கல்வி வலயத்தில் பணிப்பாளராக கடமையாற்றிய ரோஹுதீ அமரதாச ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளராகவும், மாகாண கைத்தொழில் அமைச்சின் பணிப்பாளராக கடமையாற்றிய ஜீவந்த ஹேரத் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் புதிய செயலாளராகவும், எஸ்.ஜெயசிங்க மாகாண உள்ளக கணக்காளர் பிரிவிற்கு புதிய பணிப்பாளராகவும், பசறை கல்வி வலயத்தில் பணிப்பாளராக கடமையாற்றிய ஜே.எம்.ஸோனீர் ஊவா மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளராகவும், டி.ஷங்காநந்த ஊவா மாகாண கட்டடப் பிரிவு பணிப்பாளராகவும் சமந்த கித்சிறி ஊவா மாகாண வரவு-செலவுத் திட்டப் பிரிவின் பணிப்பாளராகவும் வியலுவ கல்வி வலயத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய தம்மிக ஹேரத் பதுளை கல்வி வலயத்தின் பணிப்பாளராகவும் நியமனம் பெற்ற நியமனக் கடிதங்களை மாகாண ஆளுநரிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து பதுளை கல்வி வலயத்தில் பணிப்பாளராக கடமையாற்றிய சரத் ரணசிங்க பசறை கல்வி வலயத்தின் பணிப்பாளராகவும், ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் சீரீன மேகம் வெலிமடை கல்வி வலயத்தின் பணிப்பாளராகவும், பண்டாரவளை கல்வி வலயத்தில் பிரதி பணிப்பாளராக கடமையாற்றிய எஸ்.விமலவீர வியலுவ கல்வி வலயத்தின் பணிப்பாளராகவும், பதுளை கல்வி வலயத்தில் பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றிய காரங்கி ஹெட்டியாராச்சி பண்டாரவளை கல்வி வலயத்தின் பணிப்பாளராகவும், சம்பத் நிஸ்ஸங்க மாகாண கைத்தொழில் திணைக்களப் பணிப்பாளராகவும், என்.சத்துராங்கனி சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களப் பணிப்பாளராகவும், டி.சம்பத் ஊவா மாகாண கல்வி அமைச்சின் பணிப்பாளராகவும், ஆர்.எம்.தயாரத்ன மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளராகவும், பி.குமார மோனாரகலை மாவட்ட பொது நிர்வாக உதவி ஆணையாளராகவும் நியமனம் பெற்று நியமனக் கடிதங்களை மாகாண ஆளுநரிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

குருசெத்த கடன் வட்டிவீத அதிகரிப்புக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

(அவிசாவளை நிருபர்)

குருசெத்த கடனுக்கான தவணைக் கட்டணங்களை மீளச் செலுத்தும்போது 9.5% ஆக இருந்த வட்டியை 15.5% வரை அதிகரிக்க எடுத்த தீர்மானத்திற்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளதாக சங்கத்தின் தேசிய அமைப்பாளர் கந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார். கடந்த வாரம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச வங்கிகள் மூலம் குருசெத்த கடன் திட்டத்தின் கீழ் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பெற்றுள்ள குருசெத்த கடனுக்கான வட்டியை அதிகரிக்க வங்கிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் அதிபர்

ஆசிரியர்களுக்கு கம்பளம் அல்லது கொடுப்பனவுகள் எதுவும் அதிகரிக்கப்படவில்லை. இந்நிலையில் இவ்வருட வரவு-செலவுத் திட்டத்தின் படி அரசாங்க ஊழியர்களின் கடனுக்கான வட்டியை உயர்த்துவது பாரிய அநீதியாகும் என்பதுடன் இது நிபந்தனைகளை மீறும் செயலாகும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கூடிய ஒன்றை அனுப்பியுள்ளார்.

நிதி அமைச்சு, மத்திய வங்கி, அரசியல் அதிகாரங்கள் உடைய பொது நிதி முகாமைத்துவத்திற்கு பொறுப்பான நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளின் நிதி முறைகேடுகளினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் தோள்களில் சுமத்தும் இவ்வாறான அரசாங்கத்தின் தன்னிச்சையான முடிவுகளை எமது தொழிற்சங்கம் கடுமையாக எதிர்க்கிறது. இந்த அரசாங்கம் அதிபர், ஆசிரியர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு பதிலாக கஷ்டங்களையே வழங்குகின்றது. இதற்கு எதிராக எமது சங்கத்தால் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று தெரிவித்தார்.

பிரதேச சபை பெண் உறுப்பினர்கள் இணைந்து கட்சி பேதமற்ற அமைப்பு

(கண்டி நிருபர்)

கண்டி மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளின் பெண் உறுப்பினர்கள் இணைந்து கட்சி பேதமின்றி கூட்டினைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளனர். இது குறித்த கூட்டம் கண்டி டெலோன் ஹோட்டலில் கடந்த வியாழக்கிழமை (29) நடைபெற்றது. தேசிய சமாதான சபை மற்றும் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு என்பவற்றின் ஆலோசனையுடன் தத்தமது பிரதேசங்களில் அபிவிருத்தி மற்றும் இன நல்லிணக்க வேலைத்திட்டங்களை செயற்படுத்த இக்கூட்டினைப்பு முடிவு செய்துள்ளதாக அதன் ஏற்பாட்டாளரும் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பின் அழைப்பாளருமான காமினி ஜயவீர அக்கூட்டத்தில் தெரிவித்தார். அக்குழுவை, கலகெதர, தும்பனை, ஹாரிஸ்பத்துவ, பாத்தும்பறை, தெதும்பறை, உடதும்பறை, குண்டசாலை உட்பட 20இற்கும் மேற்பட்ட பிரதேச சபைகளின் பெண் உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர். கண்டி மாவட்ட சர்வமத அமைப்பின் செயலாளர் சுனில் கொக்கல உட்பட பலர் இங்கு உரையாற்றினர்.

நு/நல்லிளை பாற்றி மகளிர் பாடசாலை நடனப் போட்டியில் முதலிடம்

(செ.திவாகரன்)

அகில இலங்கை ரீதியில் அறுநாதபுரத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற சங்கீத மற்றும் பரதநாட்டியப் போட்டியில் புத்தூக்கநடனப் பிரிவில் நுவெரெலியா நல்லிளை பாற்றி மகளிர் பாடசாலையின் தரம் 12 கலைப்பிரிவில் கல்வி பயிலும் மாணவி செல்வி நிரோஷி முதலாமிடத்தைப் பெற்று சாதனையை பதிவு செய்துள்ளார். இப் போட்டியில் நபிஷா மற்றும் தனுஷியா ஆகிய மாணவிகளும் இணைந்து பங்கேற்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சாதனையை ஏற்படுத்தியமைக்கு கோட்டக்கல்விப் பணிப்பாளர் கனேசராஜா, வலயக்கல்வி பணிப்பாளர்கள் சசந்த மற்றும் மோகன்ராஜ், பாடசாலை அதிபர் திருமதி ஜெயலக்ஷ்மி, பயிற்றுவிப்பாளர்கள், பொறுப்பாசிரியர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்களின் அயராத உழைப்பையும் அர்ப்பணிப்பையும் வாழ்த்தி கல்வியாளர்களும் பெற்றோர்களும் பாராட்டியுள்ளனர்.

தொடர்ந்து கடந்த வருடங்களில் இடம்பெற்ற பல்வேறு பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதில் முன்னிலையில் நு/நல்லிளை பாற்றி மகளிர் பாடசாலை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலர்திருக்கும் 2023 புத்தாண்டை வரவேற்கும் வகையில் உடப்புஸ்லாவையில் சர்வமதத்தினரையும் ஒன்றிணைத்து ஒளிவிழா நேற்று முதலாம் திகதி இடம்பெற்றது. கிராமசேவை அதிகாரி என்.சிவசேகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மதகுருமார், உடப்புஸ்லாவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சமூக சேவையாளர்கள் மற்றும் பிரதேச பொது மக்கள் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர். (இராகலை நிருபர்)

டக்ளஸை சந்தித்த இராணுவத் தளபதி

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுவர்ணா போதோட்ட, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று முன்தினம் (31) சனிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், அண்மைக்காலமாக அதிகரித்துள்ள மாட்டுத் திருட்டு, போதைப்பொருள் பாவனை, வாள்வெட்டு உட்பட்ட சமூக விரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மேலும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாத வகையில், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கின்ற காணிகளை விடுவித்தல் மற்றும் பாடசாலை மைதானம் போன்ற பொது இடங்களை புனரமைப்பதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக வும் இச்சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஆங்கில புதுவருடத்தை முன்னிட்டு வவுனியா, வைரவபுளியங்குளம் ஆதினிநாயகர் ஆலயத்தில் ஆலயத்தின் பிரதம குருக்கள் மயூரசர்மா குருக்கள் தலைமையில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

ஆங்கில புதுவருடத்தை முன்னிட்டு வவுனியா, குடியிருப்பு தூய ஆவியானவர் ஆலயத்தில் ஆலய குரு யேசுவா கிறிஸ்வஸ் தலைமையில் காலை விசேட திருப்பலி பூஜைகள் இடம்பெற்று, திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புதுவருடத்தை வரவேற்று சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

வலி. வடக்கு புனர்வாழ்வு சங்கத் தலைவர் காலமானார்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் அருணாசலம் குணபாலசிங்கம் (வயது 77) நேற்று முன்தினம் (31) சனிக்கிழமை காலமானார்.

மயிலிட்டியைச் சேர்ந்த அ. குணபாலசிங்கம், ஒரு சிறந்த புகைப்படக் கலைஞனுமாவார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற "பழங்கால புகைப்படங்களின் திருவிழா 2020" (Jaffna vintage Photo Festival-2020) நிகழ்வில் வாழ்நாள் சாதனையாளர் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தார்.

வலி. வடக்கிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து கடந்த 32 வருட காலங்களுக்கு மேல் வசித்துவரும் நிலையில், தனது கடைசி காலம் வரையிலும் அந்த மக்களை சொந்த இடங்களில் மீள் குடியேற்ற வேண்டும் என கோரிக்கையை முன்வைத்து போராடி வந்தவராவார். மயிலிட்டியைச் சேர்ந்த 700 மீளவ குடும்பங்களும், பலாலியைச் சேர்ந்த 2000 குடும்பங்களும் மீள்குடியேற்றத்திற்காக காத்திருக்கின்றன எனவும், நாங்கள் உயிர் பிழைப்புக்காக இந்த நிலங்களை விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோமென போராடி வந்த குணபாலசிங்கம், ஜனாதிபதியை சந்தித்து, எங்கள் துயரங்களை முன்வைப்பதற்காக வாய்ப்பை வழங்கவேண்டும் என கடந்த ஒக்டோபர் மாதம் கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

அவரது கோரிக்கை நிறைவேறாத நிலையிலேயே அவர் காலமாகியுள்ளார்.

தேசிய நடனப்போட்டியில் சாதனை படைத்த இந்து மகளிர் மாணவிகள்



(யாழ். நிருபர்)

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட தேசிய நடனப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் சாதனை படைத்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை (28) அநுராதபுரத்தில் இடம்பெற்ற தேசிய நடனப் போட்டியில் மேற்படி கல்லூரியைச் சேர்ந்த மாணவிகளான வாவெளியா தட்சணாமூர்த்தி தனி ஜதீல்வரத்தில் முதலாம் இடத்தையும், நிவேதனா பிரபாகரன் தனி பதத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

மேலும், ராகவி கலைதாசன், நிவேதனா பிரபாகரன், யதுர்ஷினி குணசேன், ருக்ஷிகா இராஜரட்னம், சியாளா இராஜேந்திரன், விதுஜா சுரேஸ்குமார், ஷன்ஜா கிருபாகரன் ஆகியோர் பங்குபற்றிய குழு வர்ணம் முதலாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளது.

மன்னாரில் ஆயர் தலைமையில் புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மறை மாவட்டத்தில் புத்தாண்டு நள்ளிரவு திருவிழா திருப்பலி மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று முன்தினம் (31) இரவு 11.45 மணிக்கு கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மேலும் மாவட்டத்திலுள்ள பல ஆலயங்களிலும் நள்ளிரவு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலியின்போது ஆலயத்திற்கு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விசேட பாதுகாப்பு வழங்கியுள்ளனர். இதன்போது பல ஆயிரக்கணக்கான மக்கள் புத்தாண்டு நள்ளிரவு திருப்பலியில் கலந்துகொண்டிருந்தனர்.

புத்தாண்டு நள்ளிரவு திருப்பலியின்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தனது உரையில் தெரிவிக்கையில்,

இவ்வாண்டில் நீங்கள் சென்ற வருடம் அடப்பட்டிருந்த துன்பங்களிலிருந்து விடுபட்டு எமது நாட்டிலே பொருளாதார நிலை மாறி மக்கள் ஒரு நெருக்கடியான நிலையில் வாழாமல் விடுதலை பெற்று ஒரு சாதாரண ஆண்டாக இந்த வருடம் உங்களுக்கு இருக்க வேண்டும் என்று ஆசிக்கின்றேன்.

சென்ற ஆண்டில் பல்வேறு பிரச்சினைகளால் நாங்கள் துன்பப்பட்டோம். இனப் பிரச்சினைகள், மொழிப் பிரச்சினைகள் என மக்களை பல விதத்திலும் தாக்கிக்கொண்டிருந்தது.

அரசியலிலும், பொருளாதாரத்திலும் பெரிய நெருக்கடிகள் இருந்துவந்தன. புத்தாண்டில் உங்களுக்கு ஒரு விடுதலை கிடைக்கப்பெற்று நீங்கள் சுயீட்சமாக வாழவும் இறை ஆசீர் நிரம்ப கிடைக்கப் பெற்று மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழ்ந்திடவும் இறைவன் உங்களுக்கு அருள வேண்டும்.

இந்த ஆண்டிலேயே நீங்கள் விடுதலை பெற்ற மக்களாக ஒரு சுதந்திரத்தை கொண்டாடக் கூடும் மக்களாக வாழ இறைவன் உங்களுக்கு அருள வேண்டும்.

இலங்கை சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் இவ்வருடம் நிறைவு பெறுகின்றது.

ஆனால், மக்களுக்கு எப்படியான சுதந்திரம் இருந்தது என்று உங்களுக்குத் தெரியும். ஆகையால் அனைத்து மக்களுக்கும் உண்மையான விடுதலை கிடைக்கப்பெற்று அவர்கள் சுதந்திரத்துடன் அவர்களுடைய உரிமைகள் எல்லாம் கிடைக்கப்பெற்று சமுதாயத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டு இலங்கை ஒரு முன்னேற்றத்தை நோக்கிச் செல்ல இறைவன் எமது நாட்டில் இருக்கும் பிரச்சினைகள் எல்லாம் தீர்வு, மக்களுக்கு ஒரு சிறப்பான ஆண்டை தர வேண்டும் என்று நான் ஆசீக்கின்றேன்.

எனவே சகோதர சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன் – என்றார்.

அரசாங்கம் அறிவித்துள்ள நல்லிணக்க முயற்சிக்கு தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு செயற்படவேண்டும்!

கலாநிதி ஆறு திருமுருகன் வலியுறுத்து

(யாழ். நிருபர்)

மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒன்றுகூடிய தமிழ்க் கட்சிகள் அடுத்த தேர்தலை பற்றி சிந்திப்பது வேடிக்கையாக உள்ளது என தெரிவித்த கலாநிதி ஆறு திருமுருகன் அரசாங்கம் அறிவித்துள்ள நல்லெண்ண முயற்சிகளுக்காக மக்களின் பிரச்சினைக்காக ஒன்றுகூடுமாறு வேண்டு கோள் விடுத்தார்.

நல்லூர் தூர்க்கா மணிமண்டபத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் பிரச்சினையைத் தீர்ப்போமென ஒன்றுகூடி உள்ள பிரதிநிதிகள் அதனைக் கதைக்காது அடுத்த தேர்தலுக்கு யார் யாருடன் கூட்டுச்சேர்வது, எந்தக் கட்சியுடன் சேர்வது என்பதை கதைக்கிறீர்கள். நீங்கள் பல கட்சியாக இருப்பதை பற்றி மக்களுக்கு அக்கறை இல்லை. ஒற்றுமையாக மக்கள் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே குரலாக ஒலிக்க வேண்டும். உங்கள் பிரச்சினைகளை ஊடகங்களுக்கு வெளிப்படுத்துவது வேடிக்கையாக உள்ளது.

மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதாக இருந்தால் உங்கள் கோபதாபங்களை ஒதுக்கி வைத்துவிட்டு மக்களின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு முன்வர வேண்டும். காணிப் பிரச்சினையை விழிவிப்பதற்கு ஒன்றாக குரல் கொடுங்கள்.

கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக மக்களின் நிலங்கள் இராணுவத்தினரின் பயன்பாடுகளில் இருக்கின்றன. இந்த காணிகளில் பல இந்து ஆலயங்களும் காணப்படுகின்றன. இந்த ஆலயங்களில் வழிபாடுகளை மேற்கொள்ளுமாறு பல ஆளுநர்களிடம், அதிகாரிகளிடம், அரச தலைவர்களிடம் கோரிக்கை விடுத்தும் பயனளிக்கவில்லை. இதற்காக குரல் கொடுத்தும் பலனில்லை.

பல இந்து ஆலயங்களுக்கு அருகாமையில் புதிதாக புத்தபகவானை கொண்டுவந்து இருத்தியுள்ளதை நாங்கள் கண்டுள்ளோம்.

ஆனால், மக்கள் வழிபட விடுமாறு பல கோரிக்கைகள் முன்வைத்தபோதும் அதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையே காணப்பட்டது.

இத்தகைய நிலையில் தற்போதைய ஆட்சியாளர்களிடமிருந்து நல்லெண்ண முயற்சியாக பல விடயங்கள் இடம் பெறவுள்ளதாக கருத்துகள் வெளிவந்துள்ளன. குறிப்பாக, காணிகளை விடுவிக்க வுள்ளதாக ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் கூறியுள்ளார்கள் .

இதுமட்டுமன்றி இராணுவத்தினர் அதிகமாக இருப்பதால் அவர்களை குறைக்க வேண்டும் என்று பகிரங்கமாக தென்னிலங்கையில் குரல் கொடுத்துவருகிறார்கள்.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இந்து ஆலயங்கள், சிதைக்களின் சமாதிகளை சேதப்படுத்தி, சின்னாபின்னமாக்கி இராணுவத்திற்கான கட்டடங்களையும், பல மாளிகைகளையும் கட்டிவைத்துள்ளார்கள்.

இவற்றின் சாபத்தால்தான் இன்று இலங்கையில் பொருளாதாரத் தடைகளும், நோய்களும் அதிகரித்துள்ளன. இது தெய்வ சாபமாகும். எனவே, அனைத்து ஆலயங்களையும் விரைவாக விடுவிக்க வேண்டும்.

இத்தகைய நிலையில் இராணுவ பிடியிலுள்ள மக்களின் காணிகள், இந்து ஆலயங்களை விடுவிற்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன். இந்நிலையில், தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாக குரல்கொடுக்க முன்வருமாறு வேண்டுகின்றேன் - என்றார்.

பொலிஸார் இருவர் சிறுமி மீது 2 வருடங்களாக வல்லுறவு!

பருத்தித்துறையில் பயங்கரம்

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் சிறுமியொருவரை 2 ஆண்டுகளாக இரண்டு தமிழ்ப் பொலிஸார் பாலியல் வன்புணர் விற்குள்ளாக்கி வந்த அதிர்ச்சி சம்பவம் வெளியாகியுள்ளது.

சிறுமியை வன்புணர்விற்குள்ளாக்கியபோது, அதை காணொளியாக எடுத்து, அதை வைத்து மிரட்டியே இந்தக் கொடூரத்தை தொடர்ந்துள்ளனர்.

இரண்டு வருடங்களின் முன்னர் நிவாரணம் வழங்குவதாக தெரிவித்து, அப்போது 17 வயதாக இருந்த சிறுமியை இரண்டு தமிழ் பொலிஸார் அழைத்துச் சென்றுள்ளனர். ஆட்களில்லாத வீட்டிற்கு அழைத்துச் சென்று பாலியல் வன்புணர் விற்குள்ளாக்கியுள்ளனர்.

அதனை காணொளியாக பதிவுசெய்து, அதை வைத்து மிரட்டி, கடந்த 2 வருடங்களாக தொடர் வல்லுறவிற்குள்ளாக்கி வந்துள்ளனர்.

தற்போது 19 வயதாகியுள்ள அந்த யுவதி, கடந்த வியாழக்கிழமை திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார். இதையடுத்து அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையின் அடிப்படையிலும், அவரது வாக்குமூலத்தின் அடிப்படையிலும், அவர் 2 வருடங்களாக பாலியல் வன்புணர் விற்குள்ளாகியது தெரியவந்தது.

சம்பவம் நடைபெற்றபோது பிரதான சந்தேகநபரான பொலிஸ் உத்தியோகத்தர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திலும், பின்பு தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திலும், தற்போது முருங்கன் பொலிஸ் நிலையத்திலும் கடமையாற்றுவது தெரியவந்தது.

அந்த சந்தேகநபர், சிறுமியை வன்புணர்விற்குள்ளாக்கியபோது எடுத்த வீடியோவை பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கியுள்ளார்.

தம்மிடமும் வீடியோ இருப்பதாக தெரிவித்து, மாணவர்கள் சிலரும் அந்த சிறுமியை வன்புணர் விற்குள்ளாக்க முயன்றதும் தெரியவந்துள்ளது.

பருத்தித்துறை பொலிஸார் இது குறித்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

தர்கா நகரில் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

(பேருவளை பீ.எம்.முக்தார்)

தர்கா நகர் மாஹபா வரவேற்பு மண்டபத்தில் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் சிறப்பாக இடம்பெற்றன.

தர்கா நகர் நகரபிதா ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிமின் ஆலோசனைக்கமைய இக்கண்காட்சி இடம்பெற்றதோடு, பாடசாலை மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்களும் மலிவான விலையில் விற்பனை செய்யப்பட்டன.

பாடசாலை சிறார்களின் ஆற்றல்களை வளர்க்கும் விதத்தில் கலை, கல்வி, சித்திரம் போன்ற போட்டி நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

தர்கா நகர், லோட்டஸ் வீதியிலுள்ள மர்ஹபா வரவேற்பு மண்டபத்தை நோக்கி பிரதேசவாசிகள் காலை முதல் இரவுவரை படையெடுத்து இக்கண்காட்சியை பார்வையிட்டதோடு பெறுமதியான நூல்களையும் கொள்வனவு செய்தனர்.

கண்காட்சி அங்குரார்ப்பண நிகழ்வில் பன்னூலாசிரியர் ஹாபிஸ் இல்ஸதீன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை வைத்தியர் ரஹ்மத்துவ்லாஹ் நஜீப், பிரபல சமூகசேவையாளர் அப்துல் காதர், வர்த்தகர் எம்.லியாஸ் ஹாஜியார், முகத்தமுஸ்ஸ் ஷாதுலி முஹம்மத் ஹுஸைன், துன்துவை முஸ்லிம் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் ஏ.எச்.எம்.ஸம்ஸதீன், நஜீப் ஹாஜியார் கல்வி நிலையப் பணிப்பாளர் ஏ.ஜே.எம்.அக்பர் உட்பட பலரும் பங்குபற்றினர்.

வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி பிரதம அதிதி ஹாபிஸ் இல்ஸதீன் விசேட உரையாற்றினார்.

தர்கா நகரில் இவ்வாறான நூல் விற்பனை கண்காட்சியை ஏற்பாடு செய்த மர்ஹபா மண்டப நிர்வாகிகளை அவர் பாராட்டினார்.

பாடசாலை, பாலர் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் பங்குபற்றினர்.

முன்னாள் எம்.பி. ஸ்ரீரங்கா வாகன விபத்து விவகாரம்

11 வருடங்களின் பின் 2 பொலிஸார் பணி இடைநிறுத்தம்

11 ஆண்டுகளுக்கு முன்பு ஜே.ஸ்ரீரங்கா நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, அவர் பயணித்த வாகனம் விபத்திற்குள்ளானதில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தில், பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஆகியோர் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

ஸ்ரீரங்கா பயணித்த கார் சென்டிகுளம் வைத்தியசாலைக்கு அருகிலுள்ள மரத்தில் மோதியதில் காரில் இருந்த அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கமைய கடந்த மாதம் 29ஆம் திகதி இந்த இடைநிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விபத்து இடம்பெற்றபோது செட்டிகுளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பிரதான பொலிஸ் பரிசோதகர் ரொஷான் சஞ்சீவ மற்றும் தற்போது மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் பிரியதர்ஷன றேரத் ஆகியோர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். சஞ்சீவ தற்போது அவிசாவளை காவல்துறையின் குற்றப்பிரிவில் பணியாற்றி வருகிறார்.

இந்தக் கார் விபத்து 2011ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் திகதி இடம்பெற்றது.

அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்காவின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவின் பொலிஸ் சார்ஜன்ட் புஷ்ப குமார (36759) அங்கு உயிரிழந்தார்.

இந்த விபத்தின் பின்னர், செட்டிகுளம் பொலிஸார், உயிரிழந்த பொலிஸ் சார்ஜன்ட்டே காரை ஓட்டிச் சென்றதாக பொய்யான தகவல்களுடன் கூடிய பிரதிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததாகக் கூறப்பட்டது.

இது தொடர்பில் உயிரிழந்த பொலிஸ் சார்ஜன்ட்டின் மனைவி முன்னாள் பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கோனிடம் முறைப்பாடு செய்திருந்தார். அதன்படி, விசாரணையில் பல உயர் பொலிஸ் அதிகாரிகளின் தலையீட்டில் விபத்து தொடர்பான ஆதாரங்களை மாற்றி இறந்த பொலிஸ் சார்ஜன்ட் சாரதியாக செயற்பட்டதாகக் கூறப்பட்டமை தெரியவந்துள்ளது.

பொலிஸ் விசேட புலனாய் வுப் பிரிவினர் நடத்திய விசாரணையில், விபத்து இடம்பெற்றபோது பொலிஸ் மா அதிபராக இருந்த மஹிந்த பாலசூரிய வழங்கிய அறிவித்தலின் பிரகாரம், உயிரிழந்த உத்தியோகத்தர் சாரதி என பொலிஸ் புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அப்போது செட்டிகுளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய ரொஷான் சஞ்சீவ ஆட்சேபனை தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பின்னர் அவரை பொலிஸ்மா அதிபர் பாலசூரியவை கொழும்புக்கு வரவழைத்து, உயிரிழந்த சார்ஜன்ட் விபத்து நடந்தபோது சாரதியாக இருந்ததாகக் காட்டும் வகையில் காவல்துறை பதிவேடுகள் மாற்றப்பட்டிருப்பது தெரியவந்தது.

ஆனால் அப்போது ரொஷான் சஞ்சீவ பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியதன் காரணமாக அவர் மீதும் இது தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

Job Vacancies

Senior Merchandiser/ Trainee Merchandiser

Company: Gorgeous Trims International PVT Ltd

Email: accounts@gorgeoustrims.com

Assistant Estate Managers

Company: Kelanivalley Plantaions

Candidate Profile: GCE AL qualification and above, Have more than 04 years planting experience in Tea, Rubber, Coconut and other plantations crops, Fluency in English, Sinhala and Tamil will be a definite advantage, Sound knowledge on Plantation agriculture operations is essential.

Email: hr@kvpl.com

Registrar

Institution: University of Morotuwa

Apply: Vice Chancellor, University of Morotuwa, Moratuwa.

Assistant Manager

Bank: Indian Overseas Bank

Eligibility Criteria: Age below 30 Years, Bachelor's Degree or equivalent from a recognized University, Four years of experience in a licensed Commercial Bank will be preferred.

Apply: The Seniour Manager, Indian Overseas Bank, No: 139, Main Street, Colombo 11.

iob-colombo@iob.co.in / iobcoladv@gmail.com

Sales and Marketing Manager

Company: Imo Chicken and Agro Pvt LTD

Apply: hr@imochicken.lk / careers@imochicken.lk

Human Resource Manager, Imo Chicken and Agro Pvt LTD, 206/A, Minuwangoda Road, Udugampola.

Marketing Officer – Leasing Sales

Bank: Seylan Bank PLC

Job Responsibilities: Prepare and Implement sales and action plans, Achieve the set individual targets, Generate and qualify leads and maintain a customer database.

Qualification: GCE O/L with passes for Mathematics and Enlish and 03 passes at GCE A/L

Email: careers@seylan.lk

Senior Sales Executive

Company: Tradarea (PVT) Ltd

Email: jobs@tradarealk.com

IT Intern – Engineering

Company: Airtel Sri Lanka

Qualification: Following or completed a degree or a part qualification in IT/Software engineering/MIS or in a relevant field, Proficiency in MS Office package, Computer Literacy.

Email: careers.lanka@airtel.com

Content Writer

Bank: DFCC

Qualifications: Posses at least 1-2 years of experience as a Content Writer/ Creator/ research Writer/ Journalist with experience in Banking/ International Business/ Marketing / PR together with an outstanding portfoloio of work.

Apply: https://dfccjobportal.peopleshr.com

Senior Vice President (HR), DFCC Bank. PLC, 73/5, Galle Road, Colombo 05.

அகில இலங்கை ஸ்ரீ சாந்தல்வருபன் யாத்திரைக் குழுவின் கருப்பண்ண சுவாமி பூஜை முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாத்திரை குழுவின் தலைவர் குரு சாமி ஜெயமுருகன் வீரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களைக் காணலாம்.

மக்கள் வங்கியின் தற்காலிக பிரதம நிறைவேற்று அதிகாரியாக கிளைவ் பொன்சேகா நியமனம்

மக்கள் வங்கியின் தற்காலிக பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளராக கிளைவ் பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார். கிளைவ் பொன்சேகாவின் இந்த நியமனம் நேற்று ஜனவரி முதலாம் திகதிமுதல் அமுலுக்கு வந்தது.

பொன்சேகா, திறைசேரி நடவடிக்கைகளில் நிபுணத்துவம் பெற்ற உள்நாட்டு மற்றும் உலகளாவிய வங்கிகளில் 30 வருடங்களுக்கும் மேலான அனுபவமுள்ள ஒரு மூத்த வங்கியாளராவார். மக்கள் வங்கியில் இணைவதற்கு முன்பு அவர் ஸ்டான்டர்ட் சார்ட்டர்ட் வங்கி மற்றும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி ஆகிய வற்றில் பணியாற்றியுள்ளார். இவர், இலங்கை மத்திய வங்கியால் பல தடவைகள் வங்கி மற்றும் நிதிச் சேவைகள் துறையை அபிவிருத்தி செய்வதற்காக பின்வருவன உள்ளிட்ட பல முக்கிய சபைகளின் அங்கத்தவராக பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்.

உள்நாட்டு நிதிச் சந்தை உட்கட்டமைப்பு மேம்பாடு குறித்த சந்தைப் பணிக்குழு, இலங்கை நிதிச் சந்தையில் தற்போதுள்ள அடிப்படை வட்டி வீதங்களை மீளாய்வுசெய்ய நாணயச் சபை செயலணி நிதி அமைப்பு ஸ்திரத்தன்மை ஆலோசனைக் குழு தற்போதுள்ள கொடுப்பனவு மற்றும் தீர்வு உட்கட்டமைப்பின் இடைவெளிகள் மற்றும் எதிர்கால தேவைகளை ஆய்வுசெய்து இனங்காண்பதற்கான குழு அத்துடன், கிளைவ் பொன்சேகா முதன்மை வணிகர்கள் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளதுடன், தற்போது பீப்பிள்ஸ் லீசிங் புரொப்பர்ட்டி டெவலப்மென்ட் லிமிட்டெட்டின் தலைவராகவும் உள்ளார்.

அவர் முதன்மை வணிகர்கள் சங்கம், லங்கா பே (பிரைவேட்) லிமிட்டெட், இலங்கையின் கடன் தகவல் பணியகம் (மாற்று பணிப்பாளர்), பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிளஸ்சி லிமிட்டெட் (பங்களாதேஷ்) ஆகியவற்றின் பணிப்பாளராகவும் பணியாற்றி வருகிறார்.

பொன்சேகா இலங்கையின் வங்கியாளர்கள் கற்கை நிறுவகத்தின் உறுப்பினராவார். ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ மேற்பட்டப்படிப்பு நிலையத்தில் வணிக நிர்வாக முதுமாணிப் பட்டம் பெற்றவர்.

அவர் அவுஸ்திரேலியாவின் சான்றளிக்கப் பட்ட முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவனத்தின் சான்றளிக்கப்பட்ட உறுப்பினராகவும் உள்ளார். பொன்சேகா மொரட்டுவை புனித செபஸ்தியன் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் மஹாபிக்ஷ பட்ட மக்கள் வங்கியானது, ரூபா 3.0 டிரில்லியனுக்கு கிட்டிய ஒருங்கிணைந்த சொத்துகளுடன் நாட்டின் இரண்டாவது பாரிய நிதிச் சேவை வழங்குனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது, இவ்வங்கி நாடுமுழுவதும் 743 கிளைகள் மற்றும் சேவை மையங்களைக் கொண்டுள்ளதுடன், 14.5 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களையும் கொண்டுள்ளது. The Banker Magazine (UK) உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் ஒன்றாக மக்கள் வங்கியை இனங்கண்டுள்ளது.

நெற்றிக்கண்களுடன் பிறந்த ஆட்டுக்குட்டி

யாழில் நடந்த விசித்திரம்



புத்தூர் நவக்கிரி மேற்கு பகுதியில் விசித்திர மான கண்களுடன் ஆட்டுக்குட்டி ஒன்று பிறந்துள்ளது.

நவக்கிரி பகுதியில் ஆடு வளர்ப்பில் ஈடுபட்டு வரும் கந்தசாமி பாலகரன் என்ற விவசாயியின் ஆடே இவ்வாறு ஒரு குட்டியைப் பிரசவித்துள்ளது.

அந்தக் குட்டியின் நெற்றிக்கு மேல், இரண்டு கண்களும் ஒன்றான நிலையில் காணப்படுகின்றன.

டிசம்பர் 29ஆம் திகதி பிறந்த இந்த அதிசய ஆட்டுக்குட்டியை அந்தப் பகுதியைச் சேர்ந்த பலரும் ஆச்சரியத்துடன் பார்வையிட்டு வருகின்றனர்.

கைதடியில் ஆறுமுகநாவலர் ஆண்டுவிழா

யாழ். கைதடி கிழக்கு சனசமூக நிலையம் இந்து வாலிபர் சங்கம் நடத்திய ஆறுமுகநாவலர் ஆண்டுவிழா, கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (30) இடம்பெற்றது.

இதன்போது நாவலரின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப் பட்டது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு. திருமுருகன் உட்பட பலரும் விருந்தினராக கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன.

''இன்றைய சமூகம் நாவலர் காட்டிய வழியில் பயணிக்கிறதா, இல்லையா'' என்ற பட்டிமன்றமும், ''வள்ளி திருமணம்'' இசை நாடகமும் இடம்பெற்றன.

அரசாங்கத்தின் வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சிலமபம், புத்தளம் வீதி அகலமாக்கும் திட்டம் தற்போது இடம்பெற்று வருகின்றது. அதன்படி ஆராச்சிக்கட்டு பகுதியில் இந்த வேலைத்திட்டம் இடம்பெறுகிறது. (உடப்பு செய்தியாளர்)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கு புதிய அதிபர்

கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் புதிய அதிபராக 2023 ஜனவரி முதலாம் திகதிமுதல் அமுலாகும் வகையில் சந்திரமொலீசன் லலீசன் கல்வியமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாசாலையின் அதிபராகக் கடமையாற்றிய ச.சகுணைலிங்கம் 2022 டிசம்பர் 31ஆம் திகதி ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார்.

இதனையடுத்தே பிரதி அதிபராக கடமையாற்றிய சந்திரமொலீசன் லலீசன் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏறாவூர் நகர சபையின் பாதீடு தோல்வி

பதவியை இழந்தார் தவிசாளர்

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு, ஏறாவூர் நகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளதைதொடர்ந்து தவிசாளர் எம்.எஸ்.நழீம் தனது பதவியை இழந்துள்ளார்.

முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் வசமிருந்த ஏறாவூர் நகர சபையின் மக்கள் பிரதிநிதிகள் 17 பேரில் உப தவிசாளர் உட்பட 9 பேர் வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட 8 பேர் ஆதரவாகவும் வாக்களித்ததையடுத்து வரவு- செலவுத் திட்டம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஆளுந்தரப்பான முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் எதிர்த்து வாக்களித்ததனால் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வரவு- செலவுத் திட்டம் தவிசாளர் எம்.எஸ்.நழீமினால் வாசிக்கப்பட்டது.

முதலாம் கட்டமாக நேற்று முன்தினம் வாசிக்கப்பட்டு வாக்களிப்பிற்கு விடப்பட்டபோது தோற்கடிக்கப்பட்டது. அதையடுத்து திருத்தங்களுடன் மாலை வாசிக்கப்பட்டு சபையில் பகிரங்க வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

இறுதியில் வரவு-செலவுத்திட்டம் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டதாக செயலாளர் எம்.எச்.எம்.ஹூம் அறிவித்தார்.

ஏறாவூர் நகர சபையில் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய உறுப்பினர்கள் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, சுயேச்சைக் குழு மற்றும் ஆளும் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவரும் வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்தனர். நகர சபையின் தவிசாளர் தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்ட நிலையில், தற்போதைய வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

கஞ்சா செடி வளர்த்தவருக்கு விளக்கமறியல்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை ரொட்டவெவ பகுதியில் ஐந்து கஞ்சா செடிகளை வீட்டில் வளர்த்துவந்த குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற பதில் நீதவான் சுபாஷினி சித்திரவேல் முன்னிலையில் குறித்த சந்தேகநபரை ஆஜர்படுத்தியபோது இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாசவால் மானிய அடிப்படையில் கட்டிக்கொடுத்த வீட்டுக்குள் கஞ்சா செடியை வளர்த்து வருவதாக பொலிஸாருக்கு வழங்கிய இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த நபரை கைதுசெய்ததாகவும் அவரிடமிருந்து ஐந்து கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் திருகோணமலை, ரொட்டவெவ பகுதியைச் சேர்ந்த மும்மத் ரபீக் நிஸாம் (34 வயது) எனவும் தெரியவருகின்றது.

ரொட்டவெவ பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்ற நிலையில், கிராம மட்டத்தில் குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்கள் வழங்குகின்ற தகவலின் அடிப்படை யில் போதைப்பொருளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அறுவடை நெல்லை கொள்வனவுசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

(கிண்ணியா நிருபர்)

அறுவடை செய்யப்ப இருக்கின்ற பெரும் போகத்திற்கான நெல்லை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என கிண்ணியா விவசாய சம்மேளனங்களின் ஊடகப் பேச்சாளர் எம்.எம்.மஹ்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

கிண்ணியாவில் நேற்று (01) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

உர இறக்குமதி நிறுத்தப்பட்டமையாலும் நெற்செய்கைக்கான மூலப்பொருட்களின் விலை உயர்வினாலும் கடந்த காலங்களில் பெரிதும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வருமான இழப்பு, கடன் போன்றவற்றால்



தத்தளிக்கின்றனர்.

கடந்த பல வருடங்களாக அறுவடை செய்யப்படும் நெல்லை அரச நெற்களஞ்சிய சாலை கொள்வனவு செய்யாமையால் உத்தரவாத விலையை பேண முடியாமல் குறைந்த விலையில் தனியாருக்கு விற்கவேண்டிய நிர்ப்பந்தத்தின் மூலம் விவசாயிகள் மேலும் பாதிப்புகளுக்குள்ளாகி இருக்கின்றனர்.

எனவே, இன்னும் சில நாட்களில் ஆரம்பிக்கப்படவிருக்கின்ற பெரும்போக நெற்செய்கையின் மூலம் அறுவடை செய்யப் படுகின்ற நெல்லை அரசாங்கம் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் சார்பாக அரசிடம் கோரிக்கை விடுக்கின்றார்.

காட்டு யானை தாக்குதலில் திருமலையில் ஒருவர் பலி இருவர் காயம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் யானையின் தாக்குதலால் நபரொருவர் உயிரிழந்துள்ள நிலையில், இருவர் காயமுற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கோமரங்கடவல, புலிக்கண்டி குளம் பகுதியில் நேற்று முன்தினம் (31) அதிகாலை வீட்டின் முற்றத்தில் யானை நின்றமையால் அதனை துரத்துவதற்கு முற்பட்டபோது யானை தாக்கிய நிலையில் குறித்த இக்-திலேயே உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் நான்கு பிள்ளைகளின் தந்தையான பக்கீர் புலிக்கண்டி குளம் பகுதியைச் சேர்ந்த எம்.புஸ்சி பண்டா (74 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரின் சடலம் கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகளின் பின்னர் உடற்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை (30) வயல் காவலுக்காக சென்ற டபிள்யூ.எம்.எஸ்.பண்டா (59 வயது) யானையின் தாக்குதலால் படுகாயம் அடைந்த நிலையில், கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, மயிலவெவ பகுதியில் வீதியால் பயணித்துக் கொண்டிருந்த என். சுமதிபால (65 வயது) என்பவர் யானையின் தாக்குதலினால் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தற்போழுது யானை மின்வேலிகள் அமைத்திருந்த போதிலும் யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதாகவும் இதனை கட்டுப்படுத்த கூடிய கவனம் எடுக்கவேண்டும் எனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

'மகரு கிராமம் தகவல் மஞ்சரி' நூல் வெளியீடு

(சீனக்குடா நிருபர்)

'மகரு கிராமம் தகவல் மஞ்சரி' என்ற நூலின் வெளியீட்டு வைபவம் நேற்று முன்தினம் (31) இடம்பெற்றது.

கின்னியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, கிராமசேவகர் பிரிவான மகரு கிராமத்தின் பல்வேறு தகவல்களை இந்த நூல் உள்ளடக்கியுள்ளது.

இதனை இந்தப் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர் ஏ.எம்.அஸ்லம் தொகுத்துள்ளார்.

கின்னியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி கலந்து இதனை வெளியிட்டு வைத்தார்.

தம்பலகாமம் பகுதியில் காயங்களுக்குள்ளான காட்டு யானை சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(கந்தளாய் நிருபர்)

தம்பலகாமம் பிரதேச சபைக்குட்பட்ட புலி ஊற்றுக்குளம் காட்டுப் பகுதியில் நடக்க முடியாமல் காயங்களுக்குள்ளான நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்த காட்டு யானை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வனஜீவராசி திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதி மக்கள் கந்தளாய் வனஜீவராசி திணைக்கள அதிகாரிகளுக்கு வழங்கிய தகவலையடுத்து சிகிச்சையளிக்கப்பட்டுவந்த நிலையில் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசி திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆண் யானை ஒன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த யானையின் பிரேத பரிசோதனை நடைபெறவுள்ளதாகவும் வனஜீவராசி திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

குடும்பஸ்தரை மண்வெட்டியால் தாக்கிய மாணவன்

10ஆம் திகதிவரை விளக்கமறியல்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, மஹதிவுல்வெவ பகுதியில் இரண்டு பிள்ளைகளின் தந்தையை மண்வெட்டியால் வெட்டி காயப்படுத்திய குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்ட பாடசாலை மாணவனை எதிர்வரும் பத்தாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரப்பட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் (31) குறித்த மாணவனை ஆஜர்படுத்தியபோது இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் அதே பகுதியைச் சேர்ந்த பிரகமுவ றாலலாகே ரிவிது சதுஸ்க (16 வயது) எனவும் தெரிய வருகின்றது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

விடுமுறை தினங்களில் குறித்த மாணவன் மஹதிவுல்வெவ குளத்திற்கு மீன்பிடிப்பதற்காக செல்வதாகவும், மீன்பிடி சங்கத்தில் அங்கத்துவம் இல்லாதவர்கள் மீன்பிடிக்க தடை என தாக்குதலுக்குள்ளானவர் கூறியதையடுத்து இருவருக்கும் இடையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த மாணவன் வீதி யோரத்தில் நின்றபோது இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அருகிலுள்ள வீட்டில் மண்வெட்டி வீட்டோரத்தில் வைக்கப்பட்டிருந்த நிலையில், மண்வெட்டியை எடுத்துக்கொண்டு சென்று குறித்த நபரை வெட்டியதாகவும் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை, தலையில் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் நீதவான் முன்னிலையில் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து குறித்த மாணவனை எதிர்வரும் பத்தாம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் கட்டளை யிட்டார்.

அம்பாறை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் வட்டாரப் பிரிப்பில் முரண்பாடு

திட்டவரையை சமர்ப்பித்தவர்களை சந்திக்கிறார் அரசாங்க அதிபர்

(மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேச உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயங்களிலும், வட்டாரப் பிரிப்பிலும் மாவட்ட எல்லை நிர்ணயக்குழுவால் முஸ்லிம்களுக்கு அநீதி இடம்பெற்றுள்ளதாகவும் அதன் காரணமாக இந்த வட்டாரப் பிரிப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் புதிதாக எல்லை நிர்ணய அறிக்கையை தயாரிக்க வேண்டும் என்றும் தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவுக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் வேண்டுகோள் விடுத்தார்.

தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவுக்கும் அம்பாறை மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுக்குமிடையிலான எல்லை நிர்ணய, வட்டாரப் பிரிப்பு சம்பந்தமான கலந்துரையாடல் அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோதே அவர் இந்த விடயங்களை தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவுக்கும் குறித்த எல்லை நிர்ணயக் குழுவுக்கும் எடுத்துரைத்தார்.

முஸ்லிம்களின் பெரும்பான்மைகொண்ட உள்ளூராட்சி மன்றங்களில் முஸ்லிம் உறுப்பினர் களைக் குறைக்கும் விதமாக மாவட்ட எல்லை நிர்ணயக் குழு செயற்பட்டுள்ளதாக தெரிவித்த எச்.எம்.எம்.ஹரீஸ், கல்முனை மாநகர பிரதேசங் களில் குறிப்பாக, சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை ஆகிய பிரதேசங்களில் உள்ள வட்டாரப் பிரிப்பின் முரண்பாடுகளை உரிய தகவல்களையும், புள்ளிவிபரங்களையும் கொண்டு தேசிய எல்லை நிர்ணயக் குழுவுக்கு விளக்கினார். அதில் ஆறாக இருந்த சாய்ந்தமருதின் வட்டாரங்கள் நான்காகவும், கல்முனையின் வட்டாரங்கள் ஆறிலிருந்து நான்காகவும், மருதமுனையின் வட்டாரங்கள் நான்கிலிருந்து மூன்றாகவும் குறைக்கப்பட்ட விடயங்களை கடுமையாக ஆட்சேபித்த நாடாளுமன்ற உறுப்பினர் கல்முனை நகர இரட்டை வட்டாரம் இல்லாமலாக்கல் விடயம் தொடர்பிலும் கடுமையான விமர்சனங்களை முன்வைத்ததுடன், ஏன் அந்த வட்டாரங்களில் குறைப்பு செய்யக்கூடாது என்பதையும் தெளிவாக அக்குழுவுக்கு முன்வைத்தார். முஸ்லிம்களுக்கு மாவட்ட எல்லை நிர்ணயக்குழுவால் நிகழ்த்தப் பட்ட அநீதிகளைக் கேட்டறிந்த மஹிந்த தேசப்பிரிய, ஒருவார கால அவகாசத்தில் இந்த முரண்பாடுகளை தீர்த்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உரிய அதிகாரிகளைப் பணித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுடன் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் மட்டுமே கலந்துகொண்டிருந்தமையால் மாவட்டத்தின் சகல பிரதேச முஸ்லிம்களுக்குமான வட்டாரப் பிரிப்பின் முரண்பாடுகளை அக்குழுவினருக்கு எடுத்துரைத்தார்.

மேலும், சம்மாந்துறை முஸ்லிம் பிரதேசத்தில் இடம்பெற்ற பாராமுகமான செயற்பாடுகளை சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌசாத், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹீர் ஆகியோருடன் இணைந்து எல்லை நிர்ணயக் குழுவினருக்கு எடுத்துரைத்தார்.

சகல விடயங்களையும் கேட்டறிந்து ஆராய்ந்த தேசிய எல்லை நிர்ணயக் குழுவினரும், அக்குழு வின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவும் இந்த அறிக்கைகளிலுள்ள முரண்பாடுகளைத் தீர்த்து ஒருவாரத்தில் அறிக்கை சமர்ப்பிக்க அரசாங்க அதிபரை கோரியுள்ளார். இதன் அடுத்தகட்ட நடவடிக்கையாக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை குறித்த விடயங்கள் தொடர்பில் திட்ட அறிக்கை சமர்ப்பித்தவர்களை மாவட்ட எல்லைநிர்ணயக் குழு சந்தித்து கலந்துரையாடி தீர்க்கமான முடிவை எடுத்து அதில் எட்டப்படும் தீர்மானத்தை தேசிய எல்லை நிர்ணயக்குழுவுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.அஸ்ரப் தாஹீர் உட்பட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை அறிவுறுத்தும் எல்லை நிர்ணய மாவட்ட கலந்துரையாடல்

(கந்தளாய் நிருபர்)

தற்போதுள்ள உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இச்செயற்பாடு முன்னெடுக்கப்படும் முறைமை குறித்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை அறிவுறுத்தும் எல்லை நிர்ணய மாவட்ட கலந்துரையாடல் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் நடைபெற்றது.

இதன்போது எல்லை நிர்ணயம் தொடர்பாக அரசியல் கட்சிகள், சிவிலமைப்புகள் மூலம் வழங்கப்பட்ட முன்மொழிவுகளை அடிப்படை யாகக்கொண்டதாக இக்கலந்துரையாடல் அமையப்பெற்றதுடன் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவிலமைப்புகளின் கருத்துகளும் அலசி ஆராயப்பட்டன.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரல, எம்.எஸ்.தௌபீக், உள்ளூர் அதிகாரசபை தவிசாளர்கள், மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம, ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், மேலதிக அரசாங்க அதிபர்களான ஜே.எஸ்.அருள்ராஜ், எஸ்.சுதாகாரன், அரசியல் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

போடியார் புலம்பல்!

2023ஆம் ஆண்டும் வந்துத்து வழமையாக ஜனாதிபதியா இருக்கிற ரணில் வாழ்த்து சொல்லி இருக்காரு எலுவா..? போனவருடம் வாழ்த்து சொன்ன ஜனாதிபதி கோட்டா இந்த வருடம் பதவி இல்லாம அலைந்து தெரியிறாரு! அவரப்போல இந்த ஜனாதிபதியும் பதவி பறிபோகாம பாக்கோணும் எண்டா நாட்டு பஞ்சம் தீரோணும். அதற்கு ஒருவழி வடக்கு, கிழக்கு தமிழ்மக்களிட இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வ வழங்கிறது மட்டும்தான் சரிவரும்..! நான் சொன்னது சரிதானே எலுவா..?

ஐஸ் விநியோகித்த இளைஞன் கைது

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப்பொருளை விநியோகித்த சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றை அடுத்து கடந்த வியாழக்கிழமை (29) இரவு மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லடி விவேகானந்தா பெண்கள் பாடசாலைக்கு முன்பாக வைத்து சந்தேகநபர் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் கல்லடி பகுதியைச் சேர்ந்த 22 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேகநபர் வசமிருந்து ஐஸ் போதைப்பொருள் 2 கிராம் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சோதனை நடவடிக்கையின்போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக் கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய அம்பாறை மாவட்ட பதில் கட்டளை அதிகாரியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான நளீன் பெரேரா ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்னாயக்க மேற்பார்வையில் பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.பி.பி.எம்.டயஸ் தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் எச்.ஜி.பி.கே.நிஸ்ஸங்க உள்ளிட்ட பொலிஸ் கான்ஸ்டபிள்களான பிரியங்கர (75812), பிரசன்ன (90669), நிமேஸ்(90699), பியுமகே (94143) சாரதி குணபால (19401) அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேகநபரை கைதுசெய்தனர்.

பின்னர் கைதுசெய்யப்பட்ட நபர் உள்ளிட்ட சான்றுப் பொருட்களுடன் காத்தான்குடி பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியதுடன், விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

படுகொலைசெய்யப்பட்ட முதல் ஊடகர் தேவராஜாவின் 37ஆவது நினைவேந்தல்

(கனகராசா சரவணன்)

இலங்கையில் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட முதல் ஊடகவியலாளர் கணபதிப்பிள்ளை தேவராஜாவின் 37ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் (31) அம்பாறை ஆலையடிவேம்பு இந்து மாமன்ற மண்டபத்தில் அம்பாறை தமிழ் ஊடகவியாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

அம்பாறை தமிழ் ஊடகவியாளர் ஒன்றியத்தின் தலைவர் க.சரவணன் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், ஊடகவியலாளர் தேவராஜாவின் சகோதரர் அக்கரைப்பாக்கியன் உள்ளிட்ட குடும்ப உறவுகள், ஊடகவியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மறைந்த ஊடகவியாளர் கணபதிப்பிள்ளை தேவராஜாவின் திருவுருவப் படத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சகோதரரினால் மலர்மாலை அணிவிக்கப்பட்டு, வருகைதந்தோர் அனைவராலும் சுடரேற்றி, மலர்தூவி, 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

அக்கரைப்பற்று பிராந்திய செய்தியாளராக கடமையாற்றிய கணபதிப்பிள்ளை தேவராஜா கடந்த 1985ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் திகதி இராணுவ சுற்றிவளைப்பில் கைதுசெய்யப்பட்டு அம்பாறை கொண்டைவெட்டுவான் இராணுவ முகாமில் வைத்து படுகொலைசெய்யப்பட்ட முதல் ஊடகவியலாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் - ரஷ்யா பல்கலை புரிந்துணர்வு உடன்படிக்கை!

(மாளிகைக்காடு நிருபர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகம் சர்வதேச ரீதியாக செயற்படுகின்ற பல்கலைக்கழகங்கள், கல்வி மற்றும் ஆய்வு சார்ந்த அமைப்புகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டு, அவற்றினை பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுத்து வருகின்றது. அதன் தொடர்ச்சியாக ரஷ்யாவின் Ul. Y. Yakovlev Chuvash State Pedagogical பல்கலைக்கழகத்துக்கும் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கும் இடையிலான உடன்படிக்கை ஒன்று இணையவழி ஊடாக இடம்பெற்றது.

இவ் உடன்படிக்கைக்கான முன்னெடுப்பு களையும் தலைமைத்துவத்தையும் ரஷ்யாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பேராசிரியர் ஜனித்த ஏ லியனகே தலைமையிலான குழுவினர் மேற்கொண்டிருந்தனர்.

இணையவழியில் குறித்த உடன்படிக்கையின் போது, ரஷ்யாவின் Ul.Y.Yakovlev Chuvash State Pedagogical பல்கலைக்கழகத்தின் சார்பில் கல்வி விவகாரங்களுக்கான துணைப் பொறுப்பாளர் பேராசிரியர் இவனொவ் விளாடிமிர் நிகோலாவிக், தாளாளர் லீனா ஸ்வெட்லானா விக்டோரோவினா, அறிவியல் மற்றும் புதுமையான பணித் துறையின் தலைவர் கிரிலோப் அலக்ஸ்சான்டர் அலெக்சிவிக், ஆகியோரும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சார்பில் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர், எம்.எஸ்.ஏ.றியாட் ரூளி, பதிவாளர் மற்றும் பீடாதிபதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இவ்வமைப்புடனான புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் கற்றல், கற்பித்தல், ஆய்வு மற்றும் புத்தாக்கத் துறைகளில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் பயனடைவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்போது ஆசிரிய-மாணவ பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வு மாநாடுகள், ஆய்வு வெளியீடுகள், சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறிகள், ஆசிரியர் மற்றும் மாணவர் பயிற்சிகள் உள்ளிட்ட பல ஒன்றிணைந்த வேலைத்திட்டங்களை துரிதகதியில் நடைமுறைப்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது.

இதுபோன்ற புரிந்துணர்வு உடன்படிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன்படி ரஷ்யா, துருக்கி, மலேசியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுடன் எதிர்வரும் காலங்களில் மேலும் பல புரிந்துணர்வு உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்தமானது பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகத் தின் மூன்றாவது ஒப்பந்தம் என்பதும் அண்மைக்காலமாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உயர் கல்வியை சர்வதேச மயப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

பல்கலைக்கழக உபவேந்தர் பேராசியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில், பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.றியாட் ரூலி இதற்கான முழு முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

சாய்ந்தமருதுக்கு தொடர்ந்தும் 06 வட்டாரங்கள் இருக்கவேண்டும்

கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் பிரதமருக்கு அவசர கடிதம்!

புதிதாக அமைக்கப்பட்டுள்ள தேர்தல் எல்லைகள் நிர்ணய ஆணைக்குழுவின் சிபாரிசின் அடைப்படையில் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள வட்டாரங்கள் எண்ணிக்கையை ஆறிலிருந்து நான்காக குறைத் துள்ளமையை ஏற்க முடியாது என்றும் சாய்ந்தமருதுக்கு தொடர்ந்தும் ஆறு வட்டாரங்கள் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தெரிவித்துள்ளார்.

பிரதமரும், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்தனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார். அக்கடிதத்தில் தொடர்ந்தும் அதிக வாக்காளர்களையும், அதிக சனத்தொகையையும்கொண்ட சாய்ந்தமருதுக்கு 04 வட்டாரங்கள் என்பது ஏற்றுக்கொள்ள முடியாது. 06 வட்டாரங்கள் தொடர்ந்தும் இருக்கவேண்டும்.

பொலிவேரியன் கிராமத்தை தனியான வட்டாரமாக பிரிக்க வேண்டிய தேவை உள்ள காலகட்டத்தில் இப்படி வட்டாரங்களை சுருக்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கல்முனையில் 05 வட்டாரங்களும், இஸ்லாமாபாத்தை தனி வட்டாரமாகவும் நிர்ணயித்துள்ளமை போன்று சாய்ந்தமருதுக்கான வட்டாரங்களும் 06ஆக இருக்க நடவடிக்கை எடுக்குமாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023ஐ கோலாகலமாக வரவேற்ற உலக நாடுகள்

உலக செய்திகள்

முதலாவதாக கிரிபாட்டி தீவில் பிறந்த புத்தாண்டு; கடைசியாக கொண்டாடிய ஹௌலாண்ட் தீவுகள்

சீனா

இங்கிலாந்து

அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா


டுபாய்

கலகஸ்தான்

தாய்லாந்து

ஒவ்வொரு நாளும் பிறக்கும்போது, இந்த பூமி அதன் ஆயுளில் ஒரு நாளை இழக்கிறது. ஆனால், ஒவ்வொரு புத்தாண்டும் பிறக்கும்போது உலகமே ஒரு ஆண்டு முடிந்து மற்றொரு ஆண்டு பிறப்பதை மகிழ்ச்சியுடனும் குதூகலத்துடனும் கொண்டாடி மகிழ்கிறது.

கொரோனா, உக்ரைன் மீது போர் என எத்தனை பிரச்சினைகள் இருந்தாலும், பிறந்திருக்கும் புத்தாண்டு நல்லதைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையோடு உலக நாடுகள், பிறந்திருக்கின்ற 2023ஆம் ஆண்டில் காலடி எடுத்துவைத்து கொண்டாட்டங்களை முன்னெடுத்து, வாழ்த்துகளைப் பரிமாறிக்கொள்கிறார்கள்.

முதலாவதாக புத்தாண்டைக் கொண்டாடிய கிரிபாட்டி

ஆனால், புத்தாண்டு பிறப்பை உலகம் முழுவதும் ஒரேநேரத்தில் கொண்டாடுவதில்லை. உலக நாடுகள் ஒவ்வொன்றும் சூரிய உதயத்தை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு நேரத்தில் இயங்கிக்கொண்டிருக்க, புத்தாண்டை உலகின் முதல் நாடாக மத்திய பசுபிக் தீவு நாடான கிரிபாட்டி கொண்டாடி வருகிறது. கிரிபாட்டி தீவில் 2023 புத்தாண்டு பிறந்தது.

இந்த பூமியின் முதல் நாடு என்று அழைக்கப்படும் கிரிபாட்டி தீவு, டிசம்பர் 31ஆம் திகதி பகல் சுமார் 3.30 மணிக்கெல்லாம் புத்தாண்டு பிறந்து கொண்டாட்டத்தைத் தொடங்கியது. அடுத்து டோங்கா, சமோவா பசுபிக் தீவுகளும் அடுத்தடுத்து புத்தாண்டுக் கொண்டாட்டத்தைத் தொடங்கிவிட்டன.

இதனையடுத்து டிசம்பர் 31ஆம் திகதி மாலை 4.30 மணியளவில் நியூசிலாந்தில் நள்ளிரவு 12 மணியானவுடன் அந்நாட்டு மக்கள் ஆட்டம், பாட்டம், வாணவேடிக்கை என கோலாகலமாக புத்தாண்டைக் கொண்டாடினர். கண்ணைக் கவரும் வகையில் நடைபெற்ற வாணவேடிக்கை நிகழ்ச்சிகள் காண்போரை மகிழ்ச்சியில் ஆழ்த்தின. 'ஹெப்பி நியூ இயர்' என சொல்லி ஒருவருக்கொருவர் வாழ்த்துகளைப் பரிமாறி 2023ஆம் ஆண்டை வரவேற்றனர்.

ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு நேரத்தில் சூரிய உதயத்தைக் காண்பதால், அதற்கேற்ப நேரத்தை மாற்றி அமைத்துக்கொள்ளும் முறை 1884ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலுள்ளது.

கடைசியாக புத்தாண்டை வரவேற்ற ஹௌலாண்ட் தீவுகள்

அதன்படி, அமெரிக்காவுக்கு மிக அருகே இருக்கும் பேகர் மற்றும் ஹௌலாண்ட் தீவுகள்தான் புத்தாண்டை வரவேற்கும் கடைசி நாடுகள். இவை நேற்று ஜனவரி முதலாம் திகதி மாலை 5.30 மணிக்கே அங்கு புத்தாண்டு பிறந்தது.

கரோலின் தீவும் உலகிலேயே முதலில் சூரிய உதயத்தைக் காணும் நாடாக அறியப்படுகிறது. அந்தவகையில், ஒருவர் கரோலின் தீவிலிருந்து ஹவாயிலிருக்கும் தனது உறவினருக்கு புத்தாண்டு வாழ்த்து சொல்ல வேண்டும் என்றால் கிட்டத்தட்ட 24 மணிநேரம் காத்திருக்க வேண்டுமாம். அப்போதுதான் ஹவாயில் புத்தாண்டு பிறக்குமாம்.

நியூசிலாந்துக்கு அருகே இருக்கும் யங் தீவும் கூட, சில சமயங்களில் உலகிலேயே முதல் சூரிய உதயத்தைக் காணும். எது எவ்வாறாயினும் பிறந்திருக்கின்ற 2023ஆம் ஆண்டு அனைவருக்கும் நன்மை பயக்கும் ஆண்டாக அமைய இறைவனிடம் பிரார்த்திப்போம். இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல் வாழ்த்துகள்!!

உக்ரைனை ஏவுகணைகளால் துளைத்தெடுத்த ரஷ்யா



உக்ரைன் தலைநகர் கீவ் உட்பட பல நகரங்களில் இதுவரை இல்லாதளவுக்கு மிகப்பெரிய தாக்குதலை ரஷ்யா நடத்திய நிலையில், அத்தாக்குதலை உக்ரைன் இராணுவம் முறியடித்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது கடந்த 29ஆம் திகதி ஒரேநாளில் 85 ஏவுகணைகள் மூலமும், 63 முறை பல ரொக்கெட் அமைப்புகள் மூலமும், 35 முறை வான்வெளியாகவும் ரஷ்யா தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

முக்கிய உட்கட்டமைப்புகளை குறிவைத்து சுமார் 120 ஏவுகணைகள் மூலம் ரஷ்யா நடத்திய தாக்குதலில், 18இற்கும் மேற்பட்ட குடியிருப்புக் கட்டடங்களும், 10 முக்கிய உட்கட்டமைப்புகளும் அழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், ரஷ்யா ஏவிய 69 ஏவுகணைகளில் 54 ஏவுகணைகளையும், 16 ட்ரோன்களில் 11 ட்ரோன்களையும் சுட்டு வீழ்த்தியதாக ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

பாண்டியா இலங்கை அணிக்கு கடுமையான நெருக்கடியை கொடுப்பார் - குமார் சங்கக்கார

சுற்றுலா இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர் நாளை ஆரம்பமாகிறது. இந்த தொடருக்கான இந்திய அணியின் தலைவராக நட்சத்திர சகலதுறை வீரர் ஹர்டிக் பாண்டியா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், ஹர்டிக் பாண்டியா குறித்து இலங்கையின் முன்னாள் வீரர் குமார் சங்கக்கார தெரிவிக்கையில்,

கேப்டன்ஷிப் பொறுப்பது, புதிய கேப்டனின் கீழ் விளையாடுவது என்பது எப்போதுமே சவாலானதுதான் இருக்கும். ஆனால், பாண்டியா மிக எளிதாக தனது புதிய பொறுப்பை கையாள்வார் என்று கருதுகிறேன். கேப்டன்ஷிப் மாற்றம் என்பது கிரிக்கெட்டில் தவிர்க்க முடியாதது. அதற்கு அனைத்து வீரர்களின் ஒத்துழைப்பும் அவசியம்.

நியூசிலாந்து, இங்கிலாந்து போன்ற வலுவான அணிகள் கேப்டன்ஷிப் மாற்றத்தின்போது சிக்கல்களை சந்தித்துள்ளன. ஆனால், ஹர்டிக் பாண்டியாவிடம் கேப்டனுக்கான அனைத்து தகுதிகளும் உள்ளன. இளம் வீரர்களை ஒருங்கிணைத்து இலங்கை அணிக்கு கடுமையான நெருக்கடியை அவர் கொடுப்பாரென்று எதிர்பார்க்கிறேன் - என தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் குஜராத் டைட்டன்ஸ் அணியின் தலைவராக செயற்பட்ட ஹர்டிக் பாண்டியா தனது முதல் சீசனில் அபாரமாக செயல்பட்டு அணியை சம்பியனாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

2023ஆம் ஆண்டு உலக விளையாட்டு அட்டவணை

ஜனவரி

FIH ஆண்கள் ஹொக்கி உலகக் கிண்ணம், ஜனவரி 13-29 பெண்கள் U19 உலகக் கிண்ணம் 2023, ஜனவரி 14 - 29 அவுஸ்திரேலிய ஓபன், ஜனவரி 14 - 29.

பெப்ரவரி

ஐசிசி மகளிர் ரி20 உலகக் கிண்ணம் 2023, பெப்ரவரி 10 - 26.

மார்ச்

பஹ்ரைன் கிராண்ட் பிரிக்ஸ், மார்ச் 5 இங்கிலாந்து ஓபன், மார்ச் 14-19 சவூதி அரேபிய கிராண்ட் பிரிக்ஸ், மார்ச் 19 ஜப்பான் 2023 (மார்ச் இறுதி முதல் மே வரை).

ஏப்ரல்

அவுஸ்திரேலிய கிராண்ட் பிரிக்ஸ், ஏப்ரல் 2 மாஸ்டர்ஸ் போட்டி (கோல்ப்), ஏப்ரல் 3-9 BWF தோமஸ் & உபெர் கிண்ணம், ஏப்ரல் 28 - மே 5 அஜர்பைஜான் கிராண்ட் பிரிக்ஸ், ஏப்ரல் 30.

மே

மியாமி கிராண்ட் பிரிக்ஸ், மே 7 BWF சுதிர்மன் கிண்ணம் இறுதிப் போட்டிகள், மே 14-21 ITTF உலக டேபிள் டென்னிஸ் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிகள், மே 20-28 எமிலியா ரோமக்னா கிராண்ட் பிரிக்ஸ், மே 21 பிரெஞ்ச் ஓபன், மே 28 - ஜூன் 11 மொனாக்கோ கிராண்ட் பிரிக்ஸ், மே 28.

ஜூன்

NBA இறுதிப் போட்டிகள் 2023, ஜூன் 1-18 ஸ்பானிஷ் கிராண்ட் பிரிக்ஸ், ஜூன் 4 கனடியன் கிராண்ட் பிரிக்ஸ், ஜூன் 18 AFC ஆசியக் கிண்ணம், ஜூன் 16 - ஜூலை 16 CONCACAF தங்கக் கிண்ணம், ஜூன் 26 - ஜூலை 16.

ஜூலை

ஆஸ்திரிய கிராண்ட் பிரிக்ஸ், ஜூலை 2 விம்பிள்டன், ஜூலை 3- 16 பிரிட்டிஷ் கிராண்ட் பிரிக்ஸ், ஜூலை 9, 20ஆவது FINA உலக சம்பியன்ஷிப், ஜூலை 14-30 FIFA மகளிர் உலகக் கிண்ணம், ஜூலை 20 ஒகஸ்ட் 20 ஹங்கேரிய கிராண்ட் பிரிக்ஸ், ஜூலை 23 உலக விவிலித்தை சம்பியன்ஷிப், ஜூலை 31 ஒகஸ்ட் 6 பெல்ஜியன் கிராண்ட் பிரிக்ஸ் - ஜூலை 30.

ஒகஸ்ட்

ISSF உலக சம்பியன்ஷிப், ஒகஸ்ட் 14 - செப்டெம்பர் 3 BWF உலக சம்பியன்ஷிப், ஒகஸ்ட் 20 - 27 டச்சு கிராண்ட் பிரிக்ஸ், ஒகஸ்ட் 27 யுஎஸ் ஓபன், ஒகஸ்ட் 28 - செப்டெம்பர் 10 உலக தடகள சம்பியன்ஷிப், ஒகஸ்ட் 19 - 27.

செப்டெம்பர்

IWF உலக சம்பியன்ஷிப், செப்டெம்பர் 02 - 17 இத்தாலிய கிராண்ட் பிரிக்ஸ், செப்டெம்பர் 3 உலக மல்யுத்த சம்பியன்ஷிப், செப்டெம்பர் 16 - 24 டயமண்ட் லீக் இறுதி செப்டெம்பர் 16 - 17 சிங்கப்பூர் கிராண்ட் பிரிக்ஸ், செப்டெம்பர் 17 ஆசிய விளையாட்டுப் போட்டிகள், செப்டெம்பர் 23, ஒக்டோபர் 8 ஜப்பானிய கிராண்ட் பிரிக்ஸ், செப்டெம்பர் 24.

ஒக்டோபர்

கிரிக்கெட் உலகக் கிண்ணம், 2023, ஒக்டோபர் - நவம்பர் கட்டார் கிராண்ட் பிரிக்ஸ், ஒக்டோபர் 8 யுஎஸ்ஏ கிராண்ட் பிரிக்ஸ், ஒக்டோபர் 22 மெக்சிகன் கிராண்ட் பிரிக்ஸ், ஒக்டோபர் 29.

நவம்பர்

பிரேசிலியன் கிராண்ட் பிரிக்ஸ், நவம்பர் 5 லாஸ் வேகாஸ் கிராண்ட் பிரிக்ஸ், நவம்பர் 18 அபுதாபி கிராண்ட் பிரிக்ஸ், நவம்பர் 26.

டிசம்பர்

உலக கற்றுப்பயண இறுதிப் போட்டிகள், டிசம்பர் 13-17.

(மேலே குறிப்பிட்டுள்ள திகதிகள் மாற்றத்திற்கு உட்பட்டவை)

முதல் ஆண்டு அகவையை கடந்த சம்மாந்துறை றோயல் லைன்ஸ் உதைபந்தாட்ட அகடமியின் இளையோருக்கான டி குழு

சம்மாந்துறை றோயல் லைன்ஸ் உதைபந்தாட்ட அகடமியின் இளையோருக்கான டி குழுவின் வெற்றிகரமான முதலாம் ஆண்டை சிறப்பிக்கும் முகமாக அகடமி முகாமையாளர் எம்.கே.அகாஸின் ஏற்பாட்டில் நிந்தவூர் எம்.ஏ.சி. ஸ்போர்ட்ஸ் பார்க் உள்ளக விளையாட்டு அரங்கில் உதைபந்தாட்ட சுற்றுத்தொடர் அண்மையில் நடத்தப்பட்டது.

இதில் குறித்த அகடமி தலைமைப் பயிற்றுவிப்பாளர் ஏ.ஏ.எம்.தானிஸ் மற்றும் நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளர் எம்.எம்.சர்ஹான் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வை ஆரம்பிக்கும் முகமாக அங்கத்தவர்களால் கேக் வெட்டப்பட்டு பின்னர் சுவாரஸ்யமான போட்டிகளும் நடத்தப்பட்டன.

பின்னர் இப்போட்டிகளில் சிறப்பாக விளையாடிய அணி மற்றும் வீரர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. இறுதியாக தலைவராம் நன்றி உரை நிகழ்த்தப்பட்டது. இதில் அவர், நிகழ்வை வெற்றிகரமாக ஒழுங்கு செய்த அகாஸுக்கும், இந்த டி குழுவை ஆரம்பித்த அகடமி உதவிப் பயிற்றுவிப்பாளர் ஏ.எஸ்.எம். நப்றில் உள்ளிட்ட உதவியாக இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7